# பொங்கும் தமிழமுது

ஜனவரி-1985



# எட்டயபுரத்தின் நினைவாக..!

★ வக்ரதுண்டர்

சென்னைத் தெருக்களில்
இரவுக் காட்சிகளின்
முடிவில் —
வீடு திரும்பும் வழிகளில்
நடைபாதையில் மக்களின்
உறக்கத்தைக் காண
நேர்ந்திருக்கிறது !

எங்கள் நகரத்துத்
தெருக்களில் இப்படி
ஒரு காட்சியை நான்
பார்த்ததேயில்லை — ஆனால்
தமிழர்களின் பிணங்களை
இப்படி நான் காண
நேர்ந்திருக்கின்றது !

நடைபாதையைக் கண்டபோது
கண்ணீர் வடிக்க முடிந்தது !
ஆனால் ஈழத் தெருக்களில்
ஈழுவர் பிணங்களைக்
காண நேர்ந்த போது
இரத்தம் உறைந்து போனது !

"தண்ணீர்விட்டே வளர்த்தோம்
சர்வேசா — இப்பயிரைக்
கண்ணீரால்க் காத்தோம்..."
உன் பாடல்தானே இது !
உதிரத்தில் விளைந்து
உதிரத்திலேயே எமது
மாந்தர் மூழ்கிப் போனார்கள் !

●

தீபாவளி நாட்களின்போது
பட்டாசின் ஓசை
எனது காதுகளைச்
செவிடு படுத்திக் கொண்டிருந்தது !

இப்படி —
எங்கள் நாட்டின்
பொங்கல் தினங்களில் மட்டும்
வெடியோசை கேட்கும் !
இருப்பினும் அங்கு
தினம்தினம் கேட்கும்
துப்பாக்கி வேட்டுகளுக்கு
இவை ஈடில்லை !

தமிழகத்து நகரத்துத் தெருக்களில்
சினிமாவும் சிகரெட்டுமாய்
அலையும் இளைஞர்கள்
மத்தியில் —
விடுதலை ஒன்றே
தீயின் ஜுவாலையாக
நெஞ்சில் கனிய
தியாக விழுப்புண்களுடன்
திரியும்
வாலிபர்களைக் காண
நேர்ந்திருக்கின்றது !

●

பொங்கல் பண்டிகையின்
மாண்பே —
உழவர் கரங்களின்
உழைப்புத்தானே !

'காணும்' பொங்கலும்
'போகி' பொங்கலுமாய்
நான்கு தினங்கள்
பொங்கல் பண்டிகை
கலகலத்துக் கிடந்தது !

உழுவதற்கு நிலமில்லாதபோது
உழவர் திருநாள்
எமக்கேது?

இருக்கின்ற நிலங்களிலும்
பாசிசப் பயிர்களே
விளைந்து கிடந்தது !
அதை அறுவடை செய்ய
எப்போது காலம்?
அறுவடைக்குப் பின்புதானே
பொங்கல் !

●

பண்டிகை நாட்களின்
பலவித மகிழ்ச்சியை
என்னால் உணரமுடிகின்றது!

எங்கள் நாட்டின்
பண்டிகை நாட்களுக்கு
காலத் தச்சன்
எப்போது நாட்குறிப்பான்?

பாரதீ !
நீயே தீயாகவந்து
இந்த நிலைகெட்ட
மாந்தரின் நினைவுகளைச்
சுட்டெரிக்க மாட்டாயோ?

பொங்கும்

# தமிழமுது

கிண்ணம் 1 ● துளி 10

# ஐக்கிய முன்னணியின் அவசியம்...!

தமிழ் பேசும் மக்களாகிய நாம் கொடுமையான இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். ஒருபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் வேட்டை நாய்களாகிய இஸ்ரேலிய மொசாட், தென்னமரிக்க இரகசியப் பொலீஸ், பிரிட்டிஷ் கூலிப்படை இவற்றுடன் கைகோர்த்து நிற்கும் சிறீலங்காவின் கொலைகார அரசு மறுபுறமாக நமது இறுதி நம்பிக்கையான தமிழ் பேசும் மக்களின் சகல விடுதலை இயக்கங்களையும் அரசியல் சமூக அமைப்புகளையும் உள்ளடக்கிய பரந்துபட்ட ஐக்கிய முன்னணி இன்னமும் உருப்பெறாத நிலை. இனக்கொலை, பேரளவு கைதுகள் என்பவற்றை எதிர்நோக்கியபோது நமது பிரதேசங்களில் பொருளாதாரமும் நிர்வாகமும் சீர்குலைந்து பட்டினிச் சாவுகள் ஆரம்பித்து விட்டபோதும் நமது மக்கள் எதிரிக்குத் தலை பணியாது தியாகத்தீயில் நிமிர்ந்து நிற்கிறார்கள். இவர்களுக்கு இத்தகைய மனோவலிமை எங்கிருந்து வந்தது? நமது விடுதலை இயக்கங்கள் எமது பிள்ளைகள் ஒன்று படுவார்கள் எங்களை அவர்கள் கைவிட மாட்டார்கள் என்று அவர்கள் பூரணமாக நம்புகின்றார்கள். இந்த நம்பிக்கையினாலேயே நமது மக்கள் சரணாகதியை நிராகரித்து மேலும் மேலும் தியாகங்களை மேற்கொள்ளும் துணிவைப் பெறுகின்றார்கள். இந்த மக்களுக்கு நமது விடுதலை இயக்கங்கள் புது வருடப் பரிசாக ஐக்கிய முன்னணியைத் தரப்போகின்றதா? தரப்போகின்றன என்று நாம் நம்புவோம்.

பொ: த: 1

சகல விடுதலை இயக்கங்களும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை—தமிழீழத்தை—தமது இலட்சியமாகக் கொண்டுள்ளன, ஈழத்தை அடையும் பிரதான மார்க்கமாக ஆயுதப் போராட்டத்தையும் ஈழத்தின் சமூக பொருளாதார அரசியல் அமைப்பாகப் பரந்துபட்ட மக்களது சமதர்ம ஜனநாயகத்தையும் கொண்டுள்ளன. சகல விடுதலை இயக்கங்களினதும் அடிப்படைகள் ஒன்றே—மக்கள் யுத்தமா? நீண்டகால கொரில்லா யுத்தமா? இனக்கொலை அபாயத்தைக் கட்டுப்படுத்தத் தக்க வகையில் முன் தயாரிப்புகளுடான மக்கள் யுத்தமா? என்ற பிரச்சினையில் மக்கள் யுத்தம் பொது அடிப்படையாக அமைந்துள்ளது. சகல இயக்கங்களும் மக்கள் யுத்தக் காலகட்டத்தை அண்மி வருவதால் இப்பிரச்சினை தொடர்பான முரண்பாடுகளும் கருகிவிட்டது. ஐக்கிய முன்னணி தொடர்பாக இன்றுள்ள ஒரே பிரச்சினை ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவதுதான்.


விடுதலை இயக்கங்களும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அரசியல் அமைப்புகளும் அடங்கிய தமிழீழ ஆட்சிக்குழு அமைய வேண்டும். மேற்படி ஆட்சிக்கு, அரசியல் இராணுவ சிவில் நிர்வாகப் பிரிவுகளை ஒழுங்கமைப்பதன் மூலம் பரிணாமமடையவேண்டுமென்பதே இக்கால கட்டத்தின் அவசியமாகும்.

குருசேத்திர போர்க்களத்தில் விஜயன் நிலை குலைந்தது போல் நாம் நிலை குலைந்து நிற்க இது தருணமல்ல. சர்வதேச ரீதியில் நமது நண்பர்கள் யார்? எதிரியின் நண்பர்கள் யார்? என்பதைத் துல்லியமாக அடையாளம் காண்பதும் தமது நண்பர்களின் அணியில் தீவிரமாக நம்மை ஈடுபடுத்துவதும் மிகவும் முக்கியமானதாகும்.

எமது விடுதலைப் போராட்ட இயக்கங்கள் இவற்றை உணர்ந்து செயற்பட்டால்; தமிழ் பேசும், மக்கள் விடுதலை இயக்கங்களின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் செய்த தியாகங்களும், அவர்கள் மேற்படி விடுதலை இயக்கங்களில் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும் ஒருபோதும் வீண்போகாது. ●




பேச்சில் ஒரு முடிவிங்கே பிறக்கப் போவதில்லை
மூச்சினிமேல் துப்பாக்கி முகத்தில்தான் இளைஞனே!
சொந்த மண்ணை எத்தனைநாள் சுரண்டப் பொறுத்திருப்பாய்?
எந்த மூலை இருந்தாலும் எழுந்திங்கே வந்துவிடு!
தாயகம் மீட்காமல் சாவதோர் சாவா?
தீயெனப் பாயாத சிறுமையோர் வீரமா?
தோழனே இன்னும்உன் தோள்துடிக்க வில்லையா?
வேங்கை எழுந்தபின் விளையாட விலங்குண்டா?
செந்நீரைக் கண்ணீராய்ச் சிந்துவதைப் பார்த்தபின்னும்
வெந்நீரைக் கொண்டா வேதனை தீர்த்திடுவாய்?
கொடுமை கண்டு பொங்காத குறுமனமா உன்றனுக்கு?
விடுதலைக்குக் கையுயர்த்தா வீரமின்றி விலா எதற்கு?
நெருப்பே உடலாகி நிற்பவனே, இனி எந்தத்
துரும்பே வந்தாலும் துப்பாக்கித் துணையுண்டு.
மேனிமயிர் ஒவ்வொன்றும் மிளிர்கத்தி ஆகுமெனில்
தானையெலாம் அரைபட்ட தவிடாக நொறுங்குமன்றோ?
பன்னீரைக் கொப்பளித்துப் பார்த்ததில்லை, ஆதலினால்
செந்நீரைக் கோலமிடச் சிறிதும் தயக்கமில்லை.
'பால்பொங்கிச் சுவைத்திடும் பைந்தமிழ்ப் பொங்கலை
வெடிகொண்டு பொங்குவோம்; விழிநோக அழுகின்றோர்
சத்தத்தைக் கேட்டபின் தமிழீழ வீரனே!
ரத்தத்தை அல்லவோ எத்திக்கும் பொங்கணும்!
பொங்கிடுவோம், பொங்கியெழு, பொங்கலிடு!




மிகவும் அர்த்தமுள்ளதாகவும், சிந்தனையைத் தூண்டுவன வாகவும் அமைந்திருந்தது, டிசம்பர் மாத அட்டைஇதழ். தமிழீழத்திற்காகப் போராடும் இளைஞர்களின் அழிவு ஒரு அழிவல்ல. எங்கள் அழிவின் பின்பு ஒரு முழுமையான விடிவுண்டு என்பதை எரிகின்ற மெழுகுவர்த்தியை உவமானமாக காட்டியது மிகப் பொருத்தமாக இருந்தது.

''கறுப்பு ஜுலைகள்'' என்னும் தலைப்பில் செவ்வண்ணன் எழுதிய கவிதையை உன்னிப்பாகக் கவனித்தபோது என்னுள்ளேயே ஒரு உத்வேகம் எழுந்து ஆயிரம் ஜுலைகள் வந்தாலும் ''விடுதலைத்தாகம்'' தணிய மாட்டாது; தளிர்க்கும். உடலைப் பல கூறுபோட்டினும் ஒவ்வொரு உடல்கூறும் உயிர்த் தமிழ்க் கவி எழுதும் என்னும் வகையில் உயிரோட்டமான கவிதையைப் பிரசுரித்தமைக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

மார்க்கோ — கே.கே.நகர்

தமிழீழப்பகுதியில் ஒவ்வொரு தமிழ் இளைஞனும் எவ்வாறான கஷ்டமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்பதும், அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தாய், தந்தையருக்குச் செய்ய வேண்டிய கடமையினை உயிரைக் கொடுத்தே செய்ய வேண்டியுள்ளது என்பதையும் நினைக்கும்போது மனம் வேதனையடைகிறது. ''சருகாகிப் போகின்ற தமிழ்ப் பூக்கள்'' என்ற சிறுகதை இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

டி. டயாமயூரனின் ''அவர்கள்...'' கவிதை சித்திரவதைகளைச் சித்தரித்தாலும் என்னைப் போன்ற தமிழீழத்தில் வாழுகின்ற இளைஞர்களின் சிந்தனைகளையும் சீண்டி விட்டுள்ளது. மேலும் இதைப் போன்ற கவிதைகளைப் பிரசுரிப்பீர்களா?

பீட்டர் — அடையாறு

# நிக்கராகுவா தொடரும் புரட்சி..!

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

கலகக்காரர்களுக்கு நிதி, ஆயுத உதவியோடல்லாமல் அமெரிக்க அதிகாரிகளால் அண்டைநாடுகளான கொண்டுராஸ் எல்சல்வடோரில் இராணுவப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றது. ''Bபிக்பைன்II'' எனப் பெயரிடப்பட்ட ஓர் இராணுவக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கையில் 6000 அமெரிக்கத் துருப்புக்களும் கொண்டுராப் படைகளும் இணைந்து அப் பிராந்தியத்தையே பயங் கொள்ள வைத்தன. ஏவுகணைகளையும் நவீன துப்பாக்கிகளையும் கொண்ட அதிநவீன போர்க் கப்பல்கள் 19 பங்கு பற்றிய இப்போர், பயிற்சியும் எந்நேரமும் தயார் நிலையில் உள்ள 16,000 வீரர்களை கொண்ட கடற்படையும் நிக்கராகுவாவில் எக்கணத்திலும் ஊடுருவிச் சான்டினிஸ்டா அரசைப் பயமுறுத்தி அடிபணிய வைப்பதன் மூலம் எதிர்ப் புரட்சியாளர்களுக்கும் கலகக்காரர்களுக்கும் உதவுவதாகவே இருந்தது இப்பிராந்தியத்தில் அமெரிக்காவில் தொடர்ச்சியானபடைக்குவிப்பு, அமெரிக்க அணியைச் சேர்ந்த நாடுகள் மத்தியிலும் அமெரிக்காவின் நோக்கங்கள் மீது கடும் சந்தேகங்களை ஏற்படுத்திற்று.

பனாமாத் தீவான கொண்டரோடாவில் 1983 ஜனவரியில் மெக்சிக்கோ, கொலம்பியா, பனாமா, வெனிசுலா ஆகிய நாடுகள் கூட்டிய உச்சி மாநாடொன்றில் மத்திய அமெரிக்காவின் பிரச்சினைகள் பற்றியும் அவற்றின் அணுகுமுறை பற்றியும் ஒரு சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான நிலைப்பாட்டை லத்தீன் அமெரிக்க நாடுகள் எடுப்பதற்கு வழிகோலியது.

''கொண்டரோடோ அணி'' என இன்று அறியப்படும் இந் நான்கு நாடுகளும் லத்தீன் அமெரிக்க நாடுகள் விவசாயங்களில் அமெரிக்காவின் தலையீட்டைக் கடுமையாக எதிர்த்தன. அத்துடன் இப்பிராந்தியத்தின் பிரச்சினைக்குக் கிழக்கு-மேற்குக்கிடையிலான முரண்பாடுகளின் போர் என முலாம் பூச அமெரிக்கா முயல்வதையும் வன்மையாகக் கண்டித்தன.

சமாதான ஒன்றிணைந்த வாழ்வுக்கான அடிப்படைக் கோட்பாடுகளான சுயநிர்ணய உரிமை; இறைமையுள்ள அரசுகளின் சமத்துவம், சமூக, பொருளாதார அபிவிருத்தி நலன்களில் ஒத்துழைப்பு, முக்கிய பிரச்சினைகளில் சமாதானத் தீர்வு, மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றைப் பேச்சளவோடில்லாமல் விசுவாசமாகக் கடைப்பிடிப்பதன்மூலமே இப்பிராந்தியத்தில் சமாதானத்தை உத்தரவாதப் படுத்தலாம் என்றும் இவ் அணி பிரகடணப்படுத்திற்று. ரீகன் நிர்வாகம் இப்பிரகடனத்திற்கு

தனது முழு ஆதரவைத் தெரிவித்திருந்த போதிலும் மத்திய அமெரிக்காவில் தனது இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பதற்குப் பதில் மேலும் அதிகரிக்கவே செய்தது. மேலும், "Bபிக் பைன் III" என்ற குறி பெயரைக் கொண்ட மிகப்பெரிய அளவிலான ஆக்கிரமிப்பு போர்ப் பயிற்சியை நடத்துவதற்கு 15கோடி டாலர் தொகைற்கு அங்கீகாரம் அளித்தது. இப்பிராந்தியத்தில் இன்னுமோர் பெரும்போர்




ஒன்றை ரீகன் நிர்வாகம் ஆரம்பிப்பதற்கெதிரான அமெரிக்காவில் உள்ள ஜனநாயகச் சக்திகளின் நிர்ப்பந்தம் ரீகனுக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளது. அங்கீகாரம் அளிக்கப்பட்ட இப்பெரும் தொகைப் பணத்தைக் காங்கிரசுக்குத் தெரியாமல் பின்கதவு வழியாகக் கொடுப்பதற்கு ரீகன் நிர்வாகம் இப்பொழுது முயல்கிறது.

கொண்டரோடோப் பிரகடணத்தின் அடிப்படையில் நிக்கராகுவா சமாதானத்துக்கான தனது திட்டங்களை வெளியிட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்களாக:

1. நிக்கராகுவாவிற்கும் கொண்டுராவுக்கும் இடையில் ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் ஒப்பந்தம் ஒன்றில் உடனடியாக ஒப்பமிடல்.

2. எல்சல்வடோரில் அன்னியத் தலையீடு இன்றி அவர்களே தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அங்கு போராடும் குழுக்களுக்குச் எந்தநாட்டிலிருந்தும் ஆயுத வினியோகத்தை உடன் நிறுத்துதல்.

3. மத்திய அமெரிக்க நாடுகளின் அரசுகளை எதிர்க்கும் சக்திகளுக்குச் சகல இராணுவ உதவிகளையும் நிறுத்துதல்.

4. மத்திய அமெரிக்க மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளித்து இப்பிராந்தியத்தின் எந்த நாட்டிலும் உள் விவகாரங்களில் தலையிடாமையை உத்தரவாதப்படுத்தும் உறுதியளிப்பை எடுத்தல்.

5. மத்திய அமெரிக்க நாடுகளுக்கெதிரான ஆக்கிரமிப்பையும் பொருளாதார பாகுபாடுகளையும் நிறுத்துதல்.

6. இந்நாடுகளில் அன்னிய இராணுவத் தளங்களை அமைக்காதிருப்பதுடன் அன்னியப் படைகள் பங்குபற்றும் போர்ப் பயிற்சிகளை நிறுத்தல்.

இச்சமாதானத் திட்டத்தையும் இதுபோன்ற ஏனைய திட்டங்களையும் ஏற்க மறுத்த அமெரிக்கா ஒரு திருப்திகரமான விளக்கத்தைக் கூட கொடுக்காதிருந்தது. இவ்ஆண்டின் ஜூன் 3-ம் தேதி அமெரிக்க அரசாங்கசெயலாளர் ஜோர்ஜ் சுல்ற்சினுடைய விஜயத்தின் போதும் நிக்கராகுவா அரசு இத்திட்டத்தை மீண்டும் முன்

வைத்தது. அமெரிக்கா சமாதானத்தில் தானும் விருப்பம் கொண்டுள்ளதாக உலகிற்குக் காட்டுவதற்காகத் தயாரிக்கப் பட்ட கேலிக்கூத்தே சுல்ற்சின் நிக்கரகுவாவுக்கான விஜயம் சுல்ற்சின் நிக்கராகுவாவிற்குச் செல்லும்போது எவ்வித உறுதியான திட்டத்தையும் எடுத்துச் செல்லவில்லை. அத்துடன் நிக்கராகுவாவால் முன் வைத்த திட்டத்தின்பால் தனது விருப்பமின்மையையும் தெரிவித்தான்.

இன்று மத்திய அமெரிக்கா சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததிலும் பார்க்க மிகவும் மாறி விட்டது. இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதற்குக்கியூபா இன்று தனித்து நிற்கவில்லை. இன்று நிக்கராகுவா கியூபாவுடன் இணைந்து அமெரிக்கக் கழுகின் பிடியில் இருந்து லத்தீன் அமெரிக்காவைக் காப்பாற்றப் போராடுகின்றது. அனேக லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள ஜனநாயகச்சக்தியின் மகிமைக்கு ஓர் அடையாளமாகக் காண்பதுடன் இச்சிறிய பூமியின் மக்களின் துணிச்சலில் இருந்து ஓர் உந்து சக்தியைப்பெறுகின்றனர். இரண்டு தசாப்தங்களுக்கு முன் கியூபா உலகுக்கு எடுத்துக் காட்டியது போல் இன்று நிக்கராகுவா ஒரு நாட்டின் போராட்ட உணர்வுகளுக்கு நிகராக உலகின் எந்த அதி நவீன போர் இயந்திரமும் இருக்க முடியாதென்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருககின்றது. தனது புரட்சியையும் பிரதேசங்களையும் ஏகாதிபத்தியத்திடம் இருந்து பாதுகாக்கப்போராடிக் கொண்டிருக்கும் அதே வேளை சர்வதேசியத்தின் பால் உள்ள உண்மையான விசுவாசத்தால், லத்தீன் அமெரிக்காவில் போராடும் சகல மக்களுக்கும் தன்னாலான உதவிகளை வழங்குகிறது. இதன் சர்வதேசிய உணர்வு நிக்கராகுவாவின் புரட்சித் தலைவர்களில் ஒருவராகிய தோமஸ்போக்கின் ஓர் அறிக்கையில் கீழ்வருமாறு பிரதிபலிக்கின்றது. ''சாண்டினிஸ்டாப் புரட்சி அணிசேராத்தன்மையைகொண்டது. இங்கு சுதந்திரத்துக்காகப் போராடி வெற்றி பெற்ற மக்களின் தொடர்ச்சியான முழுமையான பங்களிப்பே இருக்கின்றது.''



நிக்கராகுவா ஒரு லட்சத்து இருபத்தொன்னாயிரம் சதுர கிலோ மீட்டரையும் 25 லட்சம் மக்களையும் கொண்ட ஒருசிறிய நாடுதான். ஆனால் முழுலத்தீன் அமெரிக்காவுக்கும் வழிகாட்டும் மிகப்பெரிய பொறுப்பை மிகத் துணிவுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. நிக்கராகுவா புரட்சியை மேலும் ஒன்றுபடுத்துவதன் மூலம் ஏனைய அபிவிருத்தி குன்றிய நாடுகளின் மக்கள்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# மீண்டும் குருஷேத்ரம்...!

● இரா. வேலுச்சாமி

ஹே...அர்ச்சுனா...
அதர்மமே இங்கே
அரசாளும் போது
தர்மத்தை நினைத்து
உன்
தடுமாற்றம் தகுமோ...?

சத்தியமும் தர்மமும்
உன்னைச்
சங்கடப்படுத்தினால்
இரண்டையும்
கொஞ்சக் காலம்
இளைப்பாற விடு...

நீ
குனிந்து பணிந்த போது
குதிரையாய் ஆக்கினர்
வளைந்த போது கூட
நீ
வாகனமானாய் !

எழுந்து
நீ
நிமிர்ந்தால்
எதிராளிகளின்
எலும்புகள் நொறுங்காதா?

அரசியல் கௌரவர்
அதிகாரக் கையினர்
ஆயுத பண பலம்
ஆள் அம்புக் காவல்...

ஒவ்வொரு நாளும் இவர்களின்
உல்லாச வேட்கைக்கு
உன் வீட்டுப் பாஞ்சாலிகளின்
உள்ளாடைகள் நெகிழும்!

எதிர்க்கிற நாவுகள்
எரிக்கப்பட்டன...
தடுத்துக் கேட்பவர்
தண்டிக்கப் படுகிறார்கள்...
இது தான் உனது
தேசம் எழுதிய
தீர்ப்போ?

உன்
தளபதிகள் எல்லாம்
தணலில் எரிகிறார்...

உன்
உறவும் சுற்றமும்
உக்கிரப் பெருநெருப்பில்...

உள் வட்ட வெளியில்...
துப்பாக்கிக் குண்டுகள்
துளைத்த உடலங்கள்
நொடிக்கொரு முறை
வெடித்துப் புகையும்
வெடிகளின் நெடியும்...
இதோ...
மறுபடியும்
ஓர்
யுத்தத்தின் தொடக்கம்...

யுத்த காலங்களில்
சத்தியமும் தர்மமும்
சங்கடப்படுத்தப்படலாம்...
இப்போது
வன்முறை தவிர்த்தல்
என்பது
வறட்டு வேதாந்தம்...

மறுபடியும்
ஓர்
யுத்தத்திற்கான
ஆயத்தம் செய்க...
சத்திய தர்மங்கள்
சங்கடப் படுத்தினால்
இரண்டையும்
கொஞ்சக் காலம்
இளைப்பாற விடு...

வா...
முன்னை
முன்னால் எடுப்போம் ●

# தமிழீழச் செய்திகள்

12-12-84

இராமேஸ்வரம் மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

※ யாழ். நகரில் தமிழர்கள் மீதான அரசின் வேட்டை கடுமையாகியது, பெண்கள் உட்பட 1220 தமிழர்கள் கைதாகியுள்ளனர்.

14-12-84

"கைகள் கட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் புகைப்படங்களை நான் பார்த்தேன். இக் கொடுரச் செயல் அதிகநாள் நீடிக்க முடியாது"—எனப் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

15-12-84

மட்டக்களப்புச் சிறையிலிருந்து எதிரிகள் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் அப்பகுதியில் இராணுவம் அராஜகம் புரிந்தது.

16-12-84

திருகோணமலையில் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் 300 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கப்பலில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

※ யாழ். நகரில் வீடொன்றில் புகுந்த இராணுவம் தாயையும், மகளையும் மானபங்கப்படுத்தியுள்ளது.

17-12-84

பரீட்சை எழுதச் சென்ற 200க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களை யாழ்ப்பாணத்தில் வைத்து இராணுவத்தினர் கடத்திச் சென்றுள்ளனர். மட்டக்களப்புச் சிறைக்கு இராஜேஸ்வரி என்ற 17 வயதுப் பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொன்றனர்.

18-12-84

தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 23 தமிழ்ப் பெண்களை இலங்கை இராணுவம் கைது செய்துள்ளது.

※ சாவகச்சேரி அருகே ரயில் தண்டவாளங்களைத் தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

※ இராணுவம் சுட்டதில்

தபால் ஊழியர் ஒருவர் உயிரிழந் தார்.

19-12-84

இலங்கையில் மட்டக்களப்பில் களவாஞ்சிக்குடி என்னுமிடத் தில் தீவிரவாதிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கி எட்டுப் பொலீஸார் மாண்டனர்.

21-12-84

தமிழ் இளைஞர்கள் 1000 பேரைத் தீவிரவாதிகள் என்ற பெயரில் யாழ். நகரில் இராணு வம் கைது செய்துள்ளது.

※ அவசரகால உள்நாட்டு அமைச்சுப்பொறுப்பு இலங்கைப் பிரதமர் பிரேமதாஸாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

※ சிங்கள இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் குழுவின் தலை வராகக் கல்வி அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க மேலதிகப்பதவி ஏற்றுள்ளார்.

22-12-84

இரண்டு புலனாய்வுத் துறைப் பொலீஸாரைத் தீவிரவாதிகள் கடத்தியுள்ளனர்.

※ திருகோணமலை மாவட்டத் தில் மூதூரில் பாலன், பாலச் சந்திரன் ஆகியோர் இராணுவத் தினரால் சுட்டுக் கொல்லப்பட் டனர்.

※ ''அன்னையர் முன்னணி'' என்ற அமைப்பின் தலைமையில் யாழ்நகரில் பெரும்பாலான பெண்கள், இராணுவக் கெடுபிடி களுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இவ் ஊர்வலத்தை இராணுவத்தால் தடுக்க முடியவில்லை.

23-12-84

''கண்காணிப்பு வலயம்'' என்ற பெயரில் யாழ்கடற்கரைப் பகுதியை ஒட்டி வாழும் 10,000 தமிழர்கள் வெளியேற்றப்பட் டுள்ளனர்.

※ கைது செய்யப்படும் இளை ஞர்கள் தீவிர புலன் விசார ணைக்குப் பின்பு போராளிகள் இல்லை என்பதை அறிந்ததும் மனநோய் உண்டாக்கக் கூடிய கொடிய விஷஊசியை ஏற்றி விட்டு வெளியில் விடப்பட்டுள் ளனர்.

24-12-84

யாழ்நகரில் பேராசிரியர் D. மகேசன் உட்படப் பல்கலைக் கழக மாணவர்கள் பலர் கைதாகி யுள்ளனர்.

※ வவுனியா மில்லில் வேலை செய்த மூன்று பெண்களை இராணுவம் கற்பழித்தது. உரிமையாளர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

※ இலங்கைப் பிரச்னையை அமெரிக்கா தூண்டுவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

※ யாழ்நகரில் மண்ணெண் ணெய் வாங்க வரிசையில் நின்ற வர்கள் மீது இராணுவம் சுட்ட தில் ஒரு தந்தையும் மகனும் கொல்லப்பட்டனர். பலர் பலத்த காயங்களுக்குட்பட்டுள் ளனர்.

※ வடபகுதியில் இருபாலைக் கிராமத்தில் இராணுவம் சுட்ட தில் 50 வயது முதியவர், 20 வயது இளைஞர், 4 வயதுக் குழந்தை ஆகியோர் ஸ்தலத் திலேயே இறந்துள்ளனர். கிரா

மத்தில் புகுந்த இராணுவத்தின் அடாவடித்தனங்களால் மக்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

※ ஆயுதப்படைத் தாக்குதலில் தொடர்ந்து குண்டுகளையும், பீரங்கிகளையும், ராக்கெட்டுகளையும் பயன்படுத்துமென்று அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

25-12-84

※ ஆனைக்கோட்டையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஞானப்பிரகாசம் என்பவர் வீட்டில் தீவிரவாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

27-12-84

ஈழத்தமிழ் பிரச்சினைக்குத் தீர்வுகாண மீண்டும் ஜி. பார்த்தசாரதிக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

※ இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுலார் என்பவரின் மூன்று விசைப்படகுகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

1-1-85

இலங்கையில் புத்தாண்டு தினத்தன்று புத்த பிக்குகள், கிறிஸ்தவ பாதிரிமார்கள், முஸ்லீம்கள், தமிழர்கள் ஆகியோர் இலங்கை அரசுக்கும், இதர அரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள வேண்டுகோளில் இந்நாட்டில் நிலவும் இனப் பிரச்சனைக்கு விரைவில் சுமுகத் தீர்வு காண முயல வேண்டுமென்று கேட்டு பல்வேறு துறையிலுள்ள 2800-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

நிக்கராகுவா...
(7ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்கள் வலுவடையும். இதுவே பேராசை பிடித்த அமெரிக்கா தலைமை தாங்கும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு மிகப்பெரிய அடியாக அமையும்.

இதன் நிமித்தமே அமெரிக்க ஏகாதிபத்தியம் சாண்டினிஸ்டாப் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து அழிக்க மிகக் கீழ்த்தரமாக முயல்கின்றது. இன்று நிக்கராகுவாவின் துறைமுகங்களைச் சுற்றிலும் கடற்கண்ணிகளைப் போடுவதையும் பீற்றூகொறிண்டோ நகரைக் குண்டு வீசித் தாக்கும் அமெரிக்காவின் கோழைத்தனமான செயல்களை உலகம் முழுவதும் உள்ள ஜனநாயகச் சக்திகள் கண்டிக்கின்றன. இவையும் ஏனைய நாசகார ஆக்கிரமிப்புச் சதிகளும் பாகுபாடுகளும் நிக்கராகுவா மக்களின் திடசங்கற்பத்தைச் சிறிதளவும் பாதிக்கவில்லை. எதிர்மாறாக, ஏகாதிபத்தியத்துக் கெதிரான தொடர்ச்சியான போராட்டமானது இவ் அனுபவங்களின் மூலம் மேலும் பலமடைகின்றது. டானியல் ஒட்டேகா கூறியது போல் ''நாம் வெற்றிகளில் எவ்வளவு தாராளமாக உள்ளோமோ அதேபோல் புரட்சியைப் பாதுகாப்பதில் அசைக்க முடியாத உறுதி கொண்டுள்ளோம்.'' ●

# உணர்வுகள்

● கவிஞர் வாலி




எங்கே தமிழன்
அடிபட்டாலும் —
எனக்கும் வலிக்கிறது;
எங்கே தமிழன்
மிதிபட்டாலும்
நானும் நசுங்குகிறேன்;
எங்கே தமிழன்
சுடப் பட்டாலும
நானும் சுகிக்கிறேன்:
எங்கே தமிழன்
துயர்ப்பட்டாலும்—
நானும் துக்கிக்கிறேன்!

ஈழத் தமிழனே!
இந்த
உணர்வுகளைத் தவிர...
உனக்குக் கொடுக்க—
என்னிடம்
என்ன இருக்கிறது...?
உனக்குப்
பக்க பலமாகப்
படையெடுத்து வருவதற்கு
என்னிடம்
எவ்வகைச் சேனையும் இல்லை!

நான்—
மன்னனுமல்ல;
மந்திரியுமல்ல!
ஆனால்—
கனல் நிகர்
கவிதைகளை யாத்து—
உனக்கு
உணர்வுகளை
ஊட்ட வல்ல
கவிஞன் நான்!

நிகழ்ந்து கொண்டிருக்கும்
தருமயுத்தத்தில்
நீ—
தொய்ந்து விடாமல்—
என் உணர்வுகள்...
உன்னை—
உசுப்பிவிட்டுக்
கொண்டேயிருக்கும்!
விடுதலை வேள்விகளை
விடாமல் நிகழ்த்துக;
நீ—
வெல்லத்தான் போகிறாய்;
காலம் இதை
சொல்லத்தான் போகிறது!



வட்டமேசை நாடகம் முடிந்தது

# ஒற்றுமையுணர்வுடன் போராடுவோம்...

R. ரவி

முதலாளித்துவ ஒடுக்குமுறை அமைப்பின் அடித்தளங்களை நொருக்கும் வகையில் தேச விடுதலை இயக்கங்கள் தாக்குதல் தொடுக்கின்றன. காலனியாதிக்கம் தோன்றியதற்கான முழுப்பணியும் முதலாளித்துவ அமைப்பையே சாரும். ஏகாதிபத்திய நாடுகள் உலகின் பெரும்பாலான மக்களை அடிமைப்படுத்துவதற்குத் துணைபுரிந்தது முதலாளித்துவ சமுதாயமே.

1917-ம் ஆண்டு அக்டோபரில் ரஷ்யாவில் நடைபெற்ற சோஸலிசப் புரட்சி கீழை நாடுகளின் மக்களைத் தட்டி எழுப்பியது. தம்மை ஒடுக்குபவர்களுக்கு எதிராகப் போராடும்படி அவர்களுக்கு உத்வேகம் ஊட்டியது. இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜேர்மனியும், இராணுவ ஆதிக்க ஜப்பானும் தோல்வியடைந்த பின்பு இந்தப் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. சீன,கொரிய,வியட்னாம் மக்கள் தம்மை அடக்கி ஒடுக்குவோரைத் தூக்கியெறிந்து விட்டுச் சோஸலிச அமைப்பைக் கட்ட ஆரம்பித்த பொழுது அவர்களது வெற்றியானது காலனி ஆதிக்க அமைப்பிற்கு மிகப்பெரிய அடியாக விளங்கியது. இந்தியா, இந்தோனிசியா பல ஆசிய நாடுகள் விடுதலை அடைந்தன. கீழ்த்திசைக் காலனி நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக விடுதலை அடைந்தன.

காலனி ஆதிக்கத்தின் வீழ்ச்சியானது வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். உலகச் சோஸலிச அமைப்புதோன்றியதற்கு அடுத்தபடியாக இது முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாளித்துவதின் பொது நெருக்கடியைத் தீவிரப்படுத்தும் பிரதான அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

இதன் அடிப்படையில் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பயனுள்ள வரலாற்று அறிவுக்கண் கொண்டு நோக்குதல் எல்லா விடுதலை அமைப்புகளுக்கும் பயன்தரும். எவ்வாறான தமிழீழத்தைப் பெற்றெடுப்பது என்பதில் விடுதலை இயக்களுக்கிடையில் முரண்பாடு காணப்படுவது இயல்பு. ஆனால் எத்தகைய தமிழீழத்தினை மக்கள் விரும்புகிறார்கள்? எத்தகைய அரசியலினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எல்லாப்பகுதி மக்களின் தேவைகளையும், அத்தியாவசிய அபிலாசைகளையும் பூர்த்தி செய்யலாம் என்பதில் கவனம் செல்லுதல் மிக மிக அவசியமாகும்.

எந்த ஒரு புரட்சியும், விடுதலையும் முழுமையாக மக்கள் பங்கு பெறாத வரையில் வெற்றி அடைந்ததாக வரலாறு இல்லை. புரட்சி தோல்வி அடைவது வேறுவிஷயம், அதில் மக்கள் பங்கு பற்றுவது வேறு விஷயம். ஒரு புரட்சி பின்வரும் விடயங்கள் சரியாக அமுலாக்

கப் படாத காலகட்டத்தில் தான் தோல்வியடைகின்றன.

கொள்கையும், நோக்கமும் தெளிவாக விளக்கப்படாத நேரத்தில் புரட்சி செய்யும் பொழுது கையாள வேண்டிய வழிவகைகளையும், முறைகளையும் நன்கு விளங்கிக்கொள்ளாத பட்சத்தில் பொது மக்களின் பெரும்பான்மையான ஆதரவு கிடைக்காத கால கட்டத்தில் தான் புரட்சியோ, விடுதலையோ தோல்வியை அரவணைக்கவேண்டி நேருகின்றது.

நாம் ஒரு இனவாத அடக்குமுறை அரசிடம் விடுதலை பெறும் நோக்கோடு போராடுகின்றோம். அவ்வாறு போராடிப் பெறும் விடுதலை, வெறும் இனவாத அட்டூழியங்களுக்கு மட்டும் முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது. அதற்கு மேலாக வர்க்க முரண்பாடு, சாதி, வரதட்சணைப் பிரச்சனை ஆகிய பிரச்சனைகளும் நாம் பெறப் போகும் தமிழீழத்தில் விடிவு காணவேண்டும்.

இன்றைய காலகட்டத்தின் நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு பார்க்கும்பொழுது ஒவ்வொரு தமிழீழ மக்களும் தாங்கள் எத்தகைய இக்கட்டான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது தெட்டத் தெளிவாகும். இத்தகைய சிங்கள இனவாத அரசுடன் தங்களை இறுகப் பிணைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் கம்பூச்சியா, வியட்னாம், கியூபா போன்ற நாடுகளை எண்ணிப் பார்த்தல் இந்நேரத்தில் சாலப் பொருந்தும். ஏனெனில் இதைவிட இக்கட்டான சூழ்நிலையிலேதான் அந்நாடுகள் தங்கள் உயிரினும் இனிய உலகம் போற்றும் விடுதலையைப் பெற்றெடுத்தார்கள்.

இன்று எம் விடுதலைப் போராட்டத்திற்குப் பல முட்டுக்கட்டைகள் காணப்படுவது எல்லாரும் அறிந்ததே. காலம் செல்லச் செல்ல எமக்கு இருக்கும் எதிர்ப்புகள் அதிகரித்தே செல்லும். இருப்பினும் உண்மையான விடுதலை வேட்கை கொண்ட அமைப்புக்களோ, இயக்கங்களோ இத்தகைய எதிர்ப்பினைக் கண்டு பயந்து அடிபணிந்து போவதில்லை. அவ்வாறு அடிபணிந்து போனதாக வரலாறு இல்லை. இன்றுள்ள விடுதலை விரும்பிகளின் நோக்கத்தைப் பார்ப்போமானால் சில இயக்கங்கள் வேண்டி நிற்கும் விடுதலை, சிங்கள இனவாத அட்டூழியங்களில் இருந்து மட்டும்தான், என்பது போலவே தோன்றுகின்றது. ஆரம்ப காலகட்டத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களும் ஆங்கிலேயரிடம் இருந்து இந்தியாவைக் கைப்பற்றினால் போதும் என்று மட்டும்தான் கருதினார், காலத்தின் மாறுதல்களும் அனுபவத்தின் முதிர்ச்சியின் காராணமாகவும் அவர் தனது விடுதலைப் பாதையை விரிவுபடுத்திப் பாரதத்தைத் தன்னிறைவு அடைந்த சுபீட்ச நாடாக மாற்றுவதற்கு முயற்சி செய்தார். தமிழீழத்தைப் பொறுத்த மட்டில் வெறும் இன விடுதலையாக மட்டுமே இருக்கக் கூடாது — இருக்கவும் முடியாது. இவ்விதத்தில் இயக்கமாவது சரியான சோஷலிசத் திசை மார்க்கத்தில் தனது கொள்கையை முன்வைப்பது தமிழீழ மக்களுக்கு நம்பிக்கையளிப்பதாகவே இருக்கின்றது.

இன்று நாம் விடுதலைக்காய் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் விடுதலை என்னும் வெற்றி கொடியை அடைவதற்கான நிதானமான அடியாக இருக்கவேண்டும் என்பதில் அதிக சிரத்தை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது. ஹோ-சி-மின் கூறியது போல் ஒரு வீட்டினைக் கட்டும் போது செங்கற்கள் சில வீணாவதையும் பணமும், நேரமும் வீணாவதையும் எவ்வாறு தடுக்கமுடியாதோ அதே போல் விடுதலை பெறுவதில் சில இடர்கள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது. எம்மிடம் இருக்கும் போராட்ட வீரர்களும், ஆதரவானர்களும் குறைவாக இருக்கலாம். அதன் காரணமாக ஒரு போராட்டம் தோல்வியடையும் என்பதல்ல, அதற்கு மாறாக அவர்களிடம் கொள்கையில் நம்பிக்கையும் மனோ தைரியமும் அவசியம். இன்று எமக்குள்ளே இருக்கும் மிகப் பெரிய பலவீனம் என்னவென்றால் அது பிளவுபட்டு நிற்பதாகும். இத்தகைய பலவீனத்தை நாம் முறியடித்து ஒற்றுமையுணர்வுடன் ஒருமித்துப் போராடுவோமாக இருந்தால் நாம் நிச்சயம் வெற்றிக் கனியைப் பறித்து விடலாம். ●




● அநீதியான அடிப்படையில் அமைந்துள்ள இந்தத் தற்காலத்தைய அமைப்பை மாற்றுவதே புரட்சி.

— பகத்சிங்

# சிந்தித்து செயல்படு தோழா!



போராடத் துணிந்து விட்ட
என் அன்புத் தோழனே!
உன் உணர்வுகளை
உள்ளக் கிளர்ச்சிகளை
நெஞ்சின் ஆழத்தில் புதைந்து கிடைக்கும்
ஆயிரமாயிரம் இதயக் குமுறல்களை
என் இதயம் மீண்டும் மீண்டும்
கூறிக் கொண்டே இருக்கின்றது.

பற்றுப் பாசங்களை அறுத்து
மாற்றுச் சமுதாயம் அமைக்கத் துணிந்து
உன்னையே ஈந்து
போராடப் போகின்ற நீ
முயல் வேட்டைக்குப் போய்
மாண்டவன் கதையாகி விடக்கூடாது.

தாம் போராடப் பிறந்த
தலைவர்கள்! அவதார புருஷர்கள்
என்போரும்
ஏன்? அடுக்கு மொழியால், மிடுக்கு நடையில்
உணர்ச்சி ததும்பக் கவிதை பாடுவோரும்
உன் உள்ளத்தில் மாயையை ஏற்படுத்தி
உன் உணர்வுகளைப் பயன்படுத்தி
தம்மை வளர்த்துக் கொள்ளக்கூடும்.

சிந்தையை மயக்கும்
விந்தைக் கதைகள் கூறி
ஆபத்தைக் காட்டி அவசரம் காட்டி
உன்னைச் சிந்திக்காது முடுக்கி விடக்கூடும்!

புதுயுகம் காணப் புறப்பட்டவனே
உன் உள்ளத்திலிருந்து பாயும் கள்ளமற்ற
சிந்தனை அலைகளைத் தடுத்து விடாதே!
ஒருகணம் விட்ட தவறுக்காக
உடலோடு உயிருள்ளவரை தவித்துவிடாதே!


ஆயுதம் மட்டும் இருந்து விட்டால்
புரட்சி என்பது வெடித்து விடாது!
ஆள் பலமில்லாப் போராட்டங்கள்
நாள் சிலச் செல்ல நீரோட்டம் போல்
ஆகிவிடும், இதை மறந்து விடாதே!

செயற்திட்டம், யுத்த தந்திரம் இல்லாது
போராடி வெற்றி வரலாற்றை
எழுதத் துணிந்து விடாதே!
கற்றதை எல்லாம் விட்டு விட்டு
அடிமை விலங்கை உடைக்கப் போய்
மறு அடிமையாகத் துடித்து விடாதே!

தெளிந்த உன் சிந்தையில்
வெற்றி வரலாறுகளைச் சற்று
வேகமாக ஓட விட
இனி உன் மீது ஐயமே எழாது!

ஏனெனில் நாளை உன் மக்களுடன்
வெற்றி வரலாற்றின் அடுத்த பாகத்தை
எழுதத் தான் போகிறாய்.

உன்னால் கற்றுத் தரப்படும் பாடம்
உலகில் உன்னைப் போல்
அடக்கப்படும் மக்களுக்காக மட்டுமல்ல
அடக்கி ஆளும் அதிகார வர்க்கத்திற்கும்
பயன்படத் தான் போகிறது!



● தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் தம்முள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்திக் போராட்டக் களத்தில் ஒன்றிணைவார்களா?

என். செல்வாதாசன்
காங்கேசன்துறை

பொது எதிரிக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் சிங்கள மேல் வர்க்கங்களுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஐக்கியப்படுவது வரலாற்று நியதியாகும். 1960 சத்தியாக்கிரகத்தின் போதும் பின் 1970களின் நடுப்பகுதிகளில் தமிழ் பேசும் மக்களது அரசியல் போராட்டத்தில் பாராளுமன்ற அடிப்படையான மேல் வர்க்கத் தலைமைகள் ஒருங்கிணைந்தன. இந்த வரலாற்றுப் போக்கின் மறுகட்டமாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்ட அணிகள் உருவாகின. இது நமது வரலாற்றில் மிகவும் முக்கியமான குணரீதியான மாற்றமாகும். நமது வரலாற்றை மார்க்சிஸ அடிப்படையில் நோக்குபவர்கள் விடுதலைப் போராளிகளதும் தலைமைகளும் மேல்வர்க்களினதும் தலைமையில் ஏகாதிபத்தியப் பிரிவுகளும் ஒன்றுபட்டுப் பரந்து விட்ட தமிழீழ விடுதலைக்கான ஏகாதிபத்திய விரோத அணியைக்கட்டி எழுப்புவார்கள் என்பதை முன்னுணர்வர். இந்த வரலாற்றுப் போக்கினுள் தம்மை இணைத்துக் கொள்ளாத அமைப்புக்கள் அவை எவ்வளவு பெரிதாக இருப்பினும் செல்வாக்கிழந்து மறைந்து போகும். முதலாளித்துவப் பாராளுமன்ற வரலாற்றில் ஒருகாலத்தில் பெரும் தலைவராக இருந்த ஜி. ஜி. பொன்னம்பலம் தன்னை இன்றைய முதலாளித்துவ அரசின் பிரதான போக்குடன் இணைத்துக் கொள்ளத் தவறியதால் செல்லாக் காசாகியதை மறந்துவிட்டீர்களா? பொது எதிரியான ஏகாதிபத்தியம் அதன் கைப்பாவையான சிங்கள மேல் வர்க்க அரசு என்பவற்றிற்கு எதிரானத் தமிழ் பேசும் மக்களது பரந்துபட்ட ஐக்கிய முன்னணியும் ஆயுதப் போராட்டமுமே இன்றைய தமிழ் பேசும் மக்களது அரசியலில் பிரதான போக்காகும்.

● தமிழீழ மக்கள் மத்தியில் முதலாளித்துவ சிந்தனைப் போக்குள்ள வாழ்க்கை முறைகளைக் களைவதில் விடுதலை இயக்கங்கள் வெற்றி கண்டுள்ளனவா?

க. அன்புமணி பிரான்சு

தமிழ் மக்கள் மத்தியில் முதலாளித்துவச் சிந்தனைப் போக்கைக் களைவதில் எதிரியும் அவனது இன ஒடுக்கல் நடவடிக்கைகளும் பங்காற்றியுள்ளன. கொழும்புத் தமிழர்களை மையமாகக் கொண்ட மேல் வர்க்கங்களின் ஏகாதியத்தியச் சார்புப் பிரிவை தோலுரித்துக் காட்டியதில் இருந்து ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவப் போக்கு

களின் வங்குரோத்துத்தனங்களை நமக்கு உணர்த்திய வரையில் எதிரி ஒரு சிறந்த ஆசிரியனாக இருந்துள்ளான். விடுதலை இயக்கங்களைப் பொறுத்து பாட்டாளி வர்க்கச் சிந்தனையை விஞ்ஞான ரீதியாகவும் முறை சார்ந்த கல்வியூடாகவும் மக்களுக்குத் தருவது தொடர்பாகக் குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்புச் செய்து வருகின்றன எனலாம். முதலாளித்துவச் சிந்தனையில் இருந்து விடுதலை பெறும் மக்களை முதலாளித்துவ அரசில் இருந்து விடுபட்டுத் தமது அரசை நிறுவுதற்காக அமைப்பு ரீதியாக அணி திரட்டுவது தொடர்பாகவும் இயக்கங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

● இலங்கை அரசின் இன்றைய கல்வித்திட்டம் தமிழீழத்திற்கு உதவுமா? அல்லது தமிழீழ நாட்டிற்குப் பயன்பெறும் புதிய கல்வித்திட்டங்கள் உருவாக்கப்படவேண்டுமா?

என். ஜனார்த்தனன்
வல்வெட்டித்துறை

தமிழீழத்தின் சமூக அமைப்பு இன்றுள்ளதைப் போன்ற சமூக அமைப்பாக இருந்தால் மட்டுமே இன்றைய கல்வி அமைப்புத் தொடர முடியும். இன்றைய கல்வியமைப்பு பரந்துபட்ட மக்களுக்கு அவர்களது சமூக, பொருளாதார, கலாச்சார விருத்திக்குச் சேவை செய்யும் தேவைகளுக்கும் வடிவமைக்கப்பட்டதல்ல. மேல் வர்க்க அரசின் தேவைக்கும் மேல் வர்க்கங்களின் சமூக, பொருளாதார, கலாச்சார நடவடிக்கைகளுக்கும் தேவையான ஊழியர்களை உருவாக்குவதே—இத்தகைய கல்வியமைப்பின் நோக்கமாகும்; தமிழீழத்திலும் இன்றைய உளுத்துப் போன சமூக அமைப்புத்தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?

● பௌத்த மத குருமார்களும் ஏனைய அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு வழங்கும் சிறு உரிமைகளையும் கூட, வழங்கி விடாது தடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இடதுசாரிகளின் துணையோடு இன்றைய முதலாளித்துவ சிங்கள அரசைக் கவிழ்த்தல் சாத்தியமாகுமா?

க. மன்னர்மன்னன் சுளிபுரம்

இலங்கையில் சிங்கள முதலாளித்துவ அரசைக் கவிழ்ப்பதன் மூலமே தமிழ் பேசும் மக்களும், சிங்கள மக்களும் நிரந்தரமான சமாதானத்தையும் சமூக, பொருளாதார அபிவிருத்தியையும் எய்தமுடியும். இதுவே நமது போராட்டத்தின் நீண்டகால நோக்கமாக அமைதல் வேண்டும். ஏகாதிபத்தியத்தின் தளமாக முதலாளித்துவ ஸ்ரீலங்கா ஒன்று பக்கத்தில் இருக்கும்வரை சோசலிசத் தமிழீழத்திற்கு வாழ்வும் இல்லை, வளமும் இல்லை.

எனினும் தற்போதைய சூழலில் பரந்துபட்ட சிங்கள மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடன் உதவிகள், மேல்வர்க்கங்களின் தமிழர் விரோத வாக்குவாதம் என்பவற்றில் மயங்கிக் கிடக்கும் சூழலில் இனக்கொலை ஆபத்தை எதிர்நோக்கும் நாம் நமது அவசரக் கடமையை இனக்கொலை ஆபத்தில் இருந்து தமிழ் பேசும் மக்களின் நிலத்தைப் பாதுகாக்கவும், [redacted] இனவிடுதலைக்கான நமது

கடமையை மேற்கொள்ளவும் வேண்டும். எனினும் நமது போராட்டத்தைச் சிங்கள பௌத்த 'மேல்வர்க்கங்களின் அரசுக்கு எதிரான போராட்டமாக, வகுப்பு வாதமற்ற விடுதலைப் போராட்டமாக முன் எடுத்துச் சென்றால் மட்டுமே நாம் இலங்கையில் சிங்கள முதலாளித்துவ அரசைக் கவிழ்க்கும் நமது நீண்டகால இலக்கை அடையமுடியும். தமிழீழப் போராட்டத்தின் மூலம் சிங்கள முதலாளித்துவ அரசின் யந்திரங்களை நமது மண்ணில் அப்புறப் படுத்துவது மட்டுமே இயலும். இதுமட்டும் எமது நோக்கமல்ல. நாம் நிரந்தர அமைதிக்கும் நல்வாழ்வுக்குமாகவே ஆயுதம் தாங்கினோம். இதனால்தான் அரைக்கிணறு தாண்டும் தத்துவங்களை நாம் நிராகரிக்கின்றோம். இதனால்தான் சிங்களப் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை நாம் நிராகரித்து சிங்கள முதலாளித்துவ அரசை சிங்கள மக்களிடம் இருந்தும் தனிமைப்படுத்தும் மூல உபாயத்தை முன் வைத்தல் அவசியமென்று கருதுகின்றோம்.

●வட்டமேசை மாநாட்டின் திடீர் முடிவு பற்றி உங்கள் கருத்து யாது?

எல். சதீஸ்குமார்
மட்டக்களப்பு

திடீர் முடிவு என்று எதைச் சொல்கிறீர்கள்? இன ஒடுக்கல் தொடர்பான தமிழ் சிங்கள மேல் வர்க்கங்களின் அரசியல் வரலாற்றில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் சகோதரர்களது காலத்தில் இருந்து இன்று வரை திரும்பத் திரும்ப இடம் பெறாத ஏதாவது அண்மையில் இடம் பெற்றுள்ளதா? வரலாற்று அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு மாறுதல்களுக்குள்ளாக மேல் வர்க்கத் தலைமைகள் பொதுவாக விரும்புவதில்லை. ஏனெனில் இத்தகைய மாறுதல்கள் தலைமையில் பரந்துபட்ட மக்களை முதன்மைப்படுத்துகின்றது. இத்தகைய மாறுதல்களுக்கு உட்படுத்துவதால் மேல் வர்க்கங்களது நலன்கள் பல பாதிக்கப்படுகின்றது. எப்போதும் தமது மேல் வர்க்க நலன்கள் எதையும் இழக்காமல் அரசியல் உரிமைகளை மீட்டெடுப்பது என்கின்ற ஒரு நடைமுறைச் சாத்தியமற்ற அகப்போராட்டில் சிக்கித் தவிக்கிறது. தமிழ் பேசும் மேல் வர்க்கம் தங்கக் கூட்டுடன் பறந்து செல்ல விரும்புகிற ஒரு கிளியினுடைய விடுதலை வேட்கை போன்றது தான் இவர்களது விடுதலை வேட்கையும்.

புரண ஜெயதிலக, டி. எஸ். சேனாநாயக்காவின் காலத்திலிருந்து ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் காலம் வரை பேச்சுவார்த்தைகள் பற்றிச் சிங்கள பௌத்தப் பேரினவாதிகளது அணுகுமுறை மூன்று அடிப்படை அம்சங்களையே கொண்டிருக்கின்றது. முதலாவது அம்சம் பரந்துபட்ட மக்களை அணி திரட்டி வெற்றிகரமாகப் போராடும் வாய்ப்பு தமிழர்களுக்கு இருக்கும் போது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலம் போராட்டத்தைப் பின்போட வைப்பது. இரண்டாவது அம்சம் தலைமை தாங்கும் தமிழ் பேசும் மேல் வர்க்கங்களது நலன்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஆர்வம்தெரிவித்து வர்க்க சமரச அடிப்படையில் போராட்டத்தைக் காலவரையின்றி தாமதப்படுத்துவதும் போராட்டங்களைச் சீர்குலைப்

பதும். மூன்றாவது அம்சம் சிங்கள மக்களது அதிருப்தியைக் காரணம் காட்டி வாக்குறுதிகளை மீளப்பெறுவதும் மீண்டும் போராட்ட நிலை உருவாகும் போது திரும்பவும் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுத்தலும் ஆகும்.

● அண்மையில் சிங்கள மேல் வர்க்கங்களது அணுகு முறையில் ஏதாவது திடீர்த் திருப்பம் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

மா. அண்ணாமலை
கொழும்புத்துறை

தமிழ் பேசும் மேல் வர்க்கத் தலைமைகளைப் பொறுத்து அமைப்பு ரீதியாகத் தம்மிடையே உள்ள ஏகாதிபத்தியச் சார்புப் பகுதியைத் தூக்கி எறிந்து விட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில் அணி சேரவும், பரந்து பட்ட மக்களது தலைமையுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களது சகல பிரச்சனைகளையும் தீர்க்க முன் வந்துள்ளனரா? அப்படி இல்லையாயின் திடீர் மாற்றம் என்று அதைக் கருதுகின்றீர்கள்?

---

# காப்போம் தமிழரை !

கற்றோரும் மற்றோரும் கற்புடைப் பெண்களும்
கட்டுக்கோப்புடன் வாழ்ந்த ஒரு தேசமடா
தத்தித் திரியும் தங்கக் குழந்தைக்கும்
தமிழீழம் அது என்று தெரியுமடா!

பட்டப்பகலிலே படுகொலை நடக்குது
பாரினில் ஒரு தேசமடா!
செந்தமிழ் மக்களின் சொந்தமும் பந்தமும்
செத்துமடிகிற தேசமடா!

அல்லல் படுகின்ற அருந்தமிழ் மக்கட்கு
அருகினில் யாருண்டு ஆறுதலுக்கு?
செத்து மடிகின்ற செந்தமிழ் மக்கட்கு
செகத்தினில் யாருண்டு ஆறுதலுக்கு!

கட்டழகானதோர் கம்பீர இராட்சியம்
கட்டியமைப்போம் நாம் — தமிழர்
கஷ்டமெல்லாம் இனி வெட்டியெறிந்தே
காப்போம் தமிழரை நாம்!

● R. ராஜன்

# 6




'தொடர் நவீனம்'

"இல்லை, மறக்கவில்லை!" வாத்துக் கத்தல் என்னவோ வாய்க்கவே இல்லைத்தான். வெறும் குறும்புச் சேட்டை, நாடக மன்றத்தில் போல: ஆனாலும் முன்னணிப் பிரிவினரும் பின்னணிப் பிரிவினரும் அவனிடம் வரவேண்டும் என்பதைப் புரிந்துக் கொண்டார்கள். அஸ்யானியாவோ, துப்பாக்கியைக் கையில் பிடித்தவாறு ஓட்டமாக ஓடி வந்தாள்.

"என்ன நடந்தது?"

"ஏதாவது நடந்திருந்தால் இதற்குள் தேவதைகள் உங்களைமறு உலகில் சந்திப்பார்கள். என்னவோ கன்றுக்குட்டி போலத் துள்ளி வருகிறாயே, வாலைக் கிளப்பிக் கொண்டு?" என அவளைக் கடிந்து கொண்டான் கமாண்டர்.

அவள் மனத்தாங்கல் அடைந்தாள். அடேயப்பா, அவள் முகம் குப்பென்று சிவப்பேறிக் தகதகத்தது மே மாதத் காலை போல, ஆனால் வேறு வழி என்ன? கற்பித்தாக வேண்டுமே:

"களைத்துப் போனீர்களோ?"

"நன்றாய்க்கேட்டீர்களே"

இப்படிவெடுக்கென்று பதில் பதில் சொன்னவள் செம்பட்டைத் தலையாள். அஸ்யானினாவை அவன் கடிந்துகொண்டதில் அவளுக்குக் கோபம்.

பிறந்தது முதல் வஸ்கோவ் தான் உண்மையில் இருந்ததைக் காட்டிலும் மூத்தவன்


என்று உணர்ந்துவந்தான். பதினான்கு வயதுப் பையனாக இருக்கையிலே அவன் குடித்தனப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிராவிட்டால் குடும்பம் வறுமையில் உழன்றிருக்கும். அதிலும் பஞ்சக் காலம். ஒழுங்கீனங்கள் மலிந்த காலம். குடும்பத்தில் எஞ்சியிருந்த ஒரே ஆண் மகன் அவன்தான். உண்ணவும் பருகவும் வகை செய்வதும் வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்துவதும் அவன் பொறுப்புஆயிற்று. கோடைகாலத்தில் வேளாண்மை செய்வான். குளிர் காலத்தில் விலங்குகளை வேட்டையாடுவான். மனிதர்களுக்கு விடுதலை பெறுவதற்கு உரிமை உண்டு என்பதை இருபது வயது ஆகும் தறுவாயில் தான் தெரிந்து கொண்டான். பிறகு இராணுவம்; அதுவும் விளையாட்டல்ல.. இராணுவத்தில் திண்மைக்கு மதிப்பு. வஸ்கோவ் இராணுவத்தை மதித்தான். இந்தக் கட்டத்திலும் அவன் இளமை அடையவில்லை. மாறாக சார்ஜண்டு மேஜர் ஆகிவிட்டான் சார்ஜண்டு மேஜர் பெரியவன் தான். படையினருக்கு அவன் எப்போதும் முதியவன். அப்படி நினைப்பது வழக்கம் ஆகி விட்டது.

பெதோத் யெவ் கிராபிச் வஸ்கோவ் தன் வயதை மறந்து போனான்; அவன் அறிந்திருந்தது ஒன்றுதான்; சிப்பாய்களுக்கும், லெப்டினண்டிகளுக்கும் அவன் மூத்தவன். எல்லா மேஜர்களுக்கும் சமமானவன், எந்தக் கர்னலுக்கும் இளையவன், விஷயம் கீழ்ப்படுவது பற்றியது அல்ல. உலக உணர்வு பற்றியது. அதனால் தான் தன் தலைமையில் பணியாற்ற வந்த பெண்களையும் அவன் ஒரு தலைமுறை முதியவன் போன்று நோக்கினான். தான் உள்நாட்டுப் போரில் பங்கு கொண்டவன் போலும், உள் நாட்டுப் போரில் அருஞ் செயல்கள் ஆற்றிய மக்கள் வீரர் சப்பாயெய வுடன் லிபிசென்ஷ்க் நகர் அருகே தேனீர் பருகியவன் போலவும் நடந்து கொண்டான். அவனுடைய தனிப்பட்ட மனப்பாங்கோ, அவன் மேற்கொண்ட ஏதேனும் சபதமோ அல்ல, இயற்கையே அவனுடைய சார்ஜண்டு மேஜர் பதவியின் தன்மையே அவன் இப்படி நடந்து கொண்டதற்குக் காரணம்.

நாம் உள்ள வயதுக்கு மூத்தவனாக நடந்து கொள்கின்றோம், என்ற எண்ணம் வஸ்கோவின் மனதில் எழுந்ததே கிடையாது. அமைதியும், வெளிச்சமும் கொண்ட இந்த இரவில் தான் சந்தேகத்திற்கு இடமான ஏதோ உணர்ச்சி அவனுக்குள் உயிர்த்தது.

ஆனால் அப்போது நள்ளிரவு ஆவதற்கு நிறைய நேரம் பாக்கி இருந்தது. இவர்கள் அரண்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய படையினர் வெள்ளாடு போலப் பாறைக்குப் பாறை தாவினார்கள். அவனும் திடீரென்று அவர்களோடு தாவத் தொடங்கினான். தான் வேகமாகத் தாவியதில் அவனே வியப்படைந்தான். ஆனால் உடனே முகம் சுளித்து நிதானமாக நடக்கவும் பாறைகள் மேல் மூன்று இடங்களில் காலை வைத்துப் படிப்படியாக ஏறவும் தொடங்கினான்.

# எமது அஞ்சலி



யாழ்ப்பாணக் கல்லூரியின் உபஅதிபர் திரு. ஆனந்தரத்தினம் அவர்களின் மகளும், சென்னை காயிதே மில்லத் மகளிர் கல்லூரி முதலாண்டு தாவரயியல் மாணவியுமான செல்வி நிரஞ்சனாதேவி 01-01-1985 அன்று மாரடைப்பினால் காலமானார்.

தமிழீழ மாணவர் பேரவையின் உறுப்பினரான அவருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—ஆசிரியர் குழு

ஆனால் முக்கியமானது இது அல்ல. அவன் அருமையான இடத்தை அரணாகத் தெரிந்தெடுத்ததுதான் முக்கியமானது. அங்கிருந்து காடுமுதல் ஏரிவரை பார்வையிட முடியும். இடத்தைத் தெரிந்தெடுத்த பின் வஸ்கோவ் முறைப்படி நேரத்தைக் கணக்கிட்டான். இந்தக் கணக்கீட்டின்படி ஜேர்மனியர் அருகே வருவதற்கு இன்னும் ஒரு நான்கு மணி நேரம் ஆகும் என்று தோன்றுயது. எனவே, மூன்று உணவுக் கலங்களில் ஆறு பேருக்குக் காணும் அளவு சூடான உணவு தயாரிக்கத் தன் படையினரை அனுமதித்தான். லீஸா பிரீச்கினா தானாகவே சமைப்பதற்கு முன் வந்தாள். அவளுக்கு உதவிசெய்யும்படி இரண்டு பட்டணத்து நோஞ்சான்களையும் ஏவினான். நெருப்பு புகையக் கூடாது என்று உத்தரவு இட்டான்.

'புகை தென்பட்டதோ, சமைத்ததெல்லாம் உடனே நெருப்பில் கொட்டிவிடுவேன்; புரிந்ததா?

'புரிந்தது' என்று ஈனக் குரலில் சொன்னான் லீஸா.

நன்றாக உலர்ந்த விறகுகளை உபயோகித்தீர்களானால் புகை வராது என்று கூறியவன் உதாரணம் காட்டுவதற்கு உலர்ந்த சுள்ளிகளை முறித்து நெருப்பு மூட்டினான். மூன்று பெண்களும் சமையல் செய்து கொண்டிருந்தபோது வஸ்கோவ் ஜூனியர் சார்ஜண்ட் அஸ்யானினா, படையினள் ழேனியா மூவரும் குன்றுத் தொடர் முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள். அரண் இடங்களையும் துப்பாக்கிச் சண்டைப் பகுதிகளையும் திசை காட்டிக் குறிகளையும் திட்டப்படுத்திக் கொண்டார்கள். திசைகாட்டிகள் வரை உள்ள தூரத்தை வஸ்கோவ் காலடிகளால் தானே அளந்து துப்பாக்கிச் சண்டைக்கான வரைபடத்தில் குறித்துக் கொண்டான், இராணுவ விதிகளுக்கு இணங்க.

இதற்குள் சாப்பாடு தயாராகி விட்டது. கமாண்டரும், ஸோனியா குர்விச்சும் ஒரு பாத்திரத்தில் சாப்பிட்டார்கள். அவள் கூச்சப்பட்டாள். கரண்டியை மட்டுமீறி ஓசைப்படுத்தினாள். உணவை அவனுக்கு விட்டுவைத்தாள். சார்ஜண்டு மேஜர் அவளைக் கடிந்து கொண்டான். 'தோழர் மொழிபெயர்ப்பாளி, வீணாக ஓசைப்படுத்துகிறாய். நான் வளர்ப்புப் பறவையல்ல, புரிந்ததா, நீ எனக்கு இரை போடுவதற்கு. வஞ்சனை இல்லாமல் சாப்பிடு, படைவீரன் செய்ய வேண்டிய முறைப்படி.'

'நான் வஞ்சனை இல்லாமல்தான் சாப்பிடுகின்றேன்.' என்று குறுநகைத்தாள் அவள்.

'பார்க்கிறேனே! பஞ்சத்தில் அடிபட்டவள் போல ஒட்டி உலர்ந்திருக்கிறாய்'

'என் உடல்வாகு அப்படி.'

'உடல்வாகா? லீஸா பிரிச்கினாவைப் பார். நம் எல்லோருக்கும் உள்ள உடல்வாகுதான் அவளுக்கும். உடம்பை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறாள்? பார்க்கவே கண்ணுக்கு இதமாய் இருக்கிறது...'

சாப்பிட்ட பிறகு தேனீர் பருகினார்கள். அரைமணி நேரம் களைப்பாறிய பின் கமாண்டர் அவர்களை வரிசையாக நிற்கவைத்தார்.

'போர் உத்தரவைக் கேளுங்கள்!' என்று ஆடம்பரமாகத் தொடங்கினான். ஆனால் இந்த உத்தரவு இடும் முறை சரிதானா என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று; 'பலத்த ஆயுத சாதனங்கள் கொண்ட இரண்டு ஜேர்மன் பகைவர்கள் கிரவ்ஸ்காயா இருப்புப் பாதையையும் தோழர் ஸ்டாலின் பெயர் கொண்ட பெலமோர்ஸ்க்-பால்டிக் கால்வாயையும் இரகசியமாக அடையும் நோக்கத்துடன் வோப் ஏரிப் பிரதேசத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஸினியூகின் குன்றுத் தொடரில் தற்காப்பு ஏற்பாடுகள் செய்து பகைவர்களைச் சிறைப்பிடிக்கும் பொறுப்பு ஆறு பேர் கொண்ட நம்முடைய படைப்பிரிவுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. நமக்கு இடப்புறம் வோப் ஏரியும், வலப்புறம் லெகன்தம்மா ஏரியும் இருக்கின்றன' சார்ஜன்டு மேஜர் பேச்சை இடைநிறுத்தி

விட்டு இரும்புத்தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டான். உத்தரவை முன்னதாக்கி காகிதத்தில் எழுதிக் கொண்டிருக்க வேண்டும் போலும் என்று குழப்பத்துடன் எண்ணமிட்டான். பின்பு பேச்சைத் தொடர்ந்தான். 'நான் இப்படித் தீர்மானித்திருக்கின்றேன்: தலைமை அரணில் இருந்து கொண்டு பகைவர்களைச் சந்திப்போம். குண்டு சுடாமல் சரணடையும்படி அவர்களுக்கு யோசனை விடுப்போம். அவர்கள் எதிர்த்தால் ஒருவனைக் கொல்வோம். மற்றவனை எப்படியாவது உயிரோடு பிடிப்போம். சேமிப்பு அரண் இடத்தில் எல்லாச் சாமான்களையும் படையினள் காலியா செத்வர்த்தாக்கின் பாதுகாப்பில் வைப்போம். போர் நடவடிக்கைகள் என் உத்தரவின்படியே தொடங்கப்பட வேண்டும். உதவிக் கமாண்டராக ஜுனியர் சார்ஜெண்ட் அஸ்யானினாவை நியமிக்கின்றேன். அவளும் செயலற்றவள் ஆக்கப்பட்டால் படையினள் சோனியா குர்விச் உதவிக் சமாண்டராகப் பொறுப்பு ஏற்பாள். கேள்விகள் உண்டா?

'என்னை எதற்காகச் சேமிப்பில் வைக்கிறீர்கள்?' என்று மனத்தாங்கலுடன் கேட்டாள் காலியா செத்வெர்த்தாக்.

'சாரமில்லாத கேள்வி, படைவீரத் தோழரே உத்தரவு கொடுக்கப்பட்டுவிட்டது, நிறைவேற்றுங்கள்.'

"'காலியா, நீ எங்கள் சேமிப்புப் படை'' என்றாள் அஸ்யாளினா.

''கேள்விகள் இல்லை. எல்லாம் தெளிவாகி விட்டது'' என்று உற்சாகமாகக் கூறினாள். ஷேனியா கமில் கோவா.

''தெளிவாகி விட்டது என்றால் அரண் இடத்திற்குப் போகும்படி கேட்டுக்கொள்கின்றேன்.''

சற்றுமுன் அஸ்யானினாவுடன் சேர்ந்து திட்டமிட்டிருந்த இடங்களில் படையினரை நியமித்தான். ஒவ்வொரு திசைக் குறிகாட்டியையும் அவர்களுக்குக் காட்டினான். சுண்டெலிகள் போல பதுங்கிக் கிடக்கும்படி இன்னொரு முறை ஒவ்வொருவரையும் எச்சரித்தான்.

''ஒருவரும் அசையக் கூடாது பகைவர்களுடன் நானே முதலில் பேசுவேன்.''

''ஜேர்மன் மொழியிலா?' என்று ஏகத் தாளம் செய்தாள் சோனியா குர்விச்.

''ருஷ்ய மொழியில்!'' என்று வெடுக்கெனக் கூறினான் சார்ஜண்டு மேஜர். ''அவர்களுக்குப் புரியாவிட்டால் நீங்கள் மொழி பெயர்ப்பீர்கள். விளங்குகிறதா!''

எல்லோரும் பேசாதிருந்தார்கள்.

''சண்டையில் இந்த முறை விழுந்தீர்களானால் மருத்துவப் பிரிவு அருகே எங்கும் இல்லை. அம்மாவுந்தான்.''

அம்மாவைப் பற்றி அவன் சொன்னது வீண். முற்றிலும் வீண். இதனால் தன் மீதே கடும் கோபம் அடைந்தான். நடக்கப் போவது துப்பாக்கி சுடும் பயிற்சி அல்லவே. உண்மையான சண்டை ஆயிற்றே.

''ஜெர்மனியர்களோடு தூரத்தில் இருந்து சண்டை செய்வது நல்லது. [தொடரும்]

# குமுறும் எரிமலை!



● சு. சுந்தரராஜன்

எரிமலையாய்க் குமுறுதம்மா எங்கள் உள்ளமே!
கரிமலையாய் ஆகிடுமே கயவர் கூட்டமே!
விதிதானே இவையெல்லாம் என்று சாற்றிட்டால்
சரித்திடுவோம் அவர் உடலைப் பொசுக்கிடுவோம்.

புத்தருமே சொல்லிவிட்டார் சத்தியத்தை!
இத்திருடமே விட்டு விட்டார் பத்தியத்தை!
கத்தியென்று எடுத்து விட்டால் களேபரமே!
இரத்தமின்றி இனியில்லை விடுதலையே இத்தரையில்!

ஆதிமுதல் வாழ்ந்துவந்த எங்களுக்கு
பாதி நீ கொடுத்திட்டால் குறைந்திடுமோ ?
சதியாலே அழித்திடவே நினைக்காதே — தமிழ்த்
தாயின் பாதங்களில் படையல் வைப்போம் உனை!

# புரட்சியும் மக்கள் பணியும்...

இன்று இலங்கையில் ஏற்பட்டு வருகின்ற பிரச்சனைகளை வார்த்தைகளால் வருணிப்பது சற்றுக் கடினமானது, நாளுக்கு நாள் அழிவின் தன்மை (Method) நவீன வடிவம்' பெற்று துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. தேர்ந்தெடுத்த மாகாணங்களில் தேர்ந்தெடுத்த ''இன அழிப்பு'' பல கோணங்களில் மேற்கொள்ளப்படுவது இதன் சிறப்பம்சம். ''கண் காணிப்புவலயம்'' ''சூனியப் பகுதி'' என்கின்ற வார்த்தைகள் இனவாத அரசினால் சிருஷ்டிக் கப்பட்டதனால் இருபத்தை யாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்; வசித்த சொந்த நிலம், தொழில், சொத்துடைமைகள் இழந்து திக்கற்ற அகதிகளாய்ப் பிற இடங்களில் தஞ்சம் புகுந்து நிற்பது கண்கூடு. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டு வருவதும் வெளிநாடுகளுக்குச் செய்திகள் அனுப்புவது தடை செய்யப்பட்டதும் ஒலிபரப்புத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் கட்டாயப் பணிப்பின் பேரில் தங்கள் சொந்த இடங்களுக்குத்திருப்பியனுப்பட்டதும் ஒரு திட்டமிட்ட பெரிய இனப் பொருளாதார அழிப்பிற்குக் கால்கோள் என்பது நிரூபண மாகிவிட்ட உண்மை.

வேலியே பயிரை மேய்ந்த கதை போல் ஆகிவிட்டது இலங்கையில் தமிழினத்தின் நிலை. அரசாங்கத்தின் இலட்சியமே தமிழர்களையும், அவர்களின் பொருளாதார வளங்களையும் அழிப்பதாகவே இருக்கின்றது. வியட்னாமில் காலனித்துவ அதிகார ஆட்சியினர் புகுந்து நடத்திய அதே வெறியாட்டம் இன்று தமிழீழப் பகுதியில் நடைபெற்று வருகின்றது. தெருக்களில் நாள் தோறும் கவச வாகனங்களும் இராணுவ ட்ரக்குகளும் ஓடுவது சர்வ சகஜமாகிவிட்ட ஒன்று. அவர்களின் வசதிக்கு ஏற்ப ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப் படுத்தி விட்டு வீடு வீடாகச் சென்று பொதுமக்களைக் கொன்று குவிப்பது இன்றும் இப்போதும் நடந்து வருகின்றது. இதனால் வீட்டை விட்டுக் காடுகளில் வாழ்பவர்கள் ஏராளம். இதன் எதிரொலியாகத் தமிழர் வாழும் பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு, பற்றாக் குறையின் நிமித்தம் உணவுப் பண்டங்களின் விலை உயர்வு. இவ்வாறு ஒரு சங்கிலித் தொடர்பான பிரச்சனை இலங்கையில் வாழும் தமிழர்கள் அனுபவிப்பது துரதிஸ்டவசமானதே.

நீண்ட அளவில் ஒரு பெரிய போராட்டம் நடக்கப்போவது உறுதி. அது தவிர்க்க முடியாத ஒன்றும் கூட. போராட்டம் என்று கூறும்பொழுது வெறுமனே இளைஞர்கள் மாத்திரம் துப்பாக்கி ஏந்திப் போராடுவது போராட்டமல்ல. அது புரட்சியின் முழுமையான தத்துவார்த் தத்தையும் கொண்டதாகாது. அதன் மூலம் எமது இலட்சியத்தை முழுமையாக வென்றெடுக்க முடியும் என்றும்

சொல்லிவிட முடியாது. பின்பு எவ்வாறு? மக்களின் முழுமையான ஆதரவுடன் போராட்டக் காலத்திற்குத் தேவையான ''அடிப்படை வசதிகள்'' என்பதனை நாம் எவ்வாறு பெறலாம்? அதற்கு எம்மாலான (மக்களாகிய) பணி என்ன என்பதும் அவசியமானதொரு வினாவாகும்.

உணவு, மருந்துப் பொருட்களை தற்பாதுகாப்பு முறைகள் என்பன எமக்கு இக்காலகட்டத்தில் அத்தியாவசியமானவை. போராட்ட காலத்தில் மக்கள் பட்டினியால் இறப்பதை விடத் துப்பாக்கிச் சூடு-பட்டு இறப்பதுமேல். அதில்தன் தாய்நாட்டிற்காக உயிர்விட்ட பெருமையாவது இருக்கும். இத்தகைய அடிப்படைத் தேவைகள் எம்மிடம் போதியளவு இருக்குமாயின் எதிரியின் தாக்குதலை நாம் இலகுவில் முறியடிக்க கூடியதாகக் இருக்கும்.

உணவுப் பொருட்களைப் பொறுத்த வரையில் எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்வதே சாத்தியமானதும், புத்திசாலித்தனமானதுமாகும். குறைந்த மாதங்களில் அறுவடை செய்யக் கூடிய நெல்லினம், தானிய வகைகள் காய்கறி வகைகளையும் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதன் மூலமும் இவ்உணவுத் தேவையினை ஓரளவு பூர்த்தி செய்து கொள்ளலாம். எதிரியின் நடவடிக்கைகளில் எமது பிரதேசத்திற்கு போக்குவரத்தைப் தடை செய்து உணவுப் பண்டங்களை நிறுத்துவதும் முக்கிய நோக்கமாக இருப்பதனால் எமது இவ்வழிவகை பயன்தரக் கூடியதாக இருக்கும். இவ்வேளையில் பண்டமாற்று முறை மூலமே பெறுமளவு பரிவர்த்தனை நடைபெறக் கூடிய சாத்தியப்பாடு இருப்பதனால் எல்லோரும் எல்லா வகையான உற்பத்தியினையும் மேற்கொள்ளுவது சாலச் சிறந்தது.

அடுத்த நடவடிக்கையாக மருந்துப் பொருட்களும் சிகிச்சை மேற்கொள்ளும் விதமும் முக்கியமானது. இயன்றளவு மருந்துப் பொருட்களைச் சேகரித்து வைப்பதும் (யுவதிகள்) எல்லோரும் முதலுதவிச் சிகிச்சைகளை எவ்வாறு செய்யலாம் என்று பயிற்சியின் மூலம் அறிந்து கொள்ளுதல் மக்கள் சேவைக்குப் பயன்தரக் கூடிய ஒரு பணியாகும். போராட்டக் காலத்தில் இச்சேவை அத்தியாவசியம் என்கின்றபடியினால் இதில் அதிக சிரத்தை காட்ட வேண்டியது அவசியமாகின்றது. அரசு வைத்திய சாலையில் பயிற்சிபெற்ற தாதியர்கள், யுவதிகள் இப்பயிற்சியை பயிற்று வதன் மூலம் இதனைப் பரவலாக்கலாம்.

தற்காப்புமுறைகள் என்பது எமது உயிர் இழப்புக்களைத் தவிர்ப்பதை முக்கிய நோக்காகக் கொண்டது, எதிரி எம் மீது தாக்குதலை மேற்கொள்ளும் போது நாம் எவ்வாறு அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது? பாதுகாப்பான முறைகளை எவ்வாறு தேடிக்கொள்ளலாம்? என்பதைத்தெரிந்து வைத்திருத்தல் நன்மை பயப்பதாகும்.

மேற்கூறிய தேவைகள் போராட்ட காலத்தில் உதவும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ○

# மனிதம்

## ராஜம் கிருஷ்ணன்

''ஒன்...டு...த்ரீ...!

''ம்...? அடி...? குதிரையைப் புடிச்சி இழு?''

மங்கை எவ்வளவு ஊக்கம் கொடுத்தும் பயனில்லை.

பால்மணம் மாறா முகமுடைய அப்பாலகனுக்கு மிஞ்சினால் ஐந்து பிராயமிருக்கலாம்.

அவன் கையில் பிடித்திருக்கும் பொம்மைத்துப்பாக்கி, நழுவி விழுகிறது.

முன் முற்றத்திலிருந்து படியேறி முகத்தில் கையுடன் சோர்ந்து உட்காருகிறான். அந்தப் பிஞ்சு முகத்தில் இனந் தெரியாச் சோகக்கருமை நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறது.

டீச்சர், ஏங்கிட்ட அந்த டுபாக்கியக் குடுங்க, நா டுமீல்னு அடிச்சு, அந்தச் சுவரில போயிக் கல்லு விழும்...'' என்று, சற்று எட்ட இருக்கும் குடிசைக் குவியல்களில் இருந்து வந்து வேடிக்கை பார்க்கும் பொடியன் ஒருவன் கூறுகிறான். அழுக்கும் சளியுமானாலும், வயிற்றுக்கில்லா வறுமையானாலும், அந்தக் குழந்தைக்குள்ள தன்னம்பிக்கை இந்தச் செல்வனுக்கு இல்லை. ஏன் இல்லை?

மங்கை துப்பாக்கியை அவன் கையில் கொடுக்கையில், சிறுகல் ஒன்று அதில் ரவையாகப் பொருத்தப்பட்டிருக்கிறது.

அவன் அந்தக்கல் திண்ணைச் சுவரில் மோதிவிழக் குறிபார்த்து அடிக்கிறான்.

இவனுடைய விளையாட்டுச் சாமான்கள் பலவகைத் துப்பாக்கிகள், வில், அம்பு, பந்து ஆகியவைதாம். இவற்றில் குடிசைச் சிறுவர்களுக்கு ஒரு கண்.

''செல்வா, இப்ப நீ எடுத்து அடி! எழுந்திரு!...ம்!...

அவனை எழுப்பும் நேரத்தில், கடையிலிருந்து சாமான்களுடன் அவன் தாய்...சிவகாமி வந்து விடுகிறாள்.

அவளைக் கண்டதும் செல்வன் ஓடி அவளைக் கட்டிக் கொள்கிறான்.

வார்த்தைகளில் வெளியிட இல்லாத விம்மல் அழுந்தி வருகிறது.

சிவகாமி அணைத்துக் கொள்கிறாள்; சாமான் பையைக் கீழே வைக்கிறாள். இனி அவனை எதுவும் கூற இயலாது.

மங்கை அந்தப் பெரிய வீட்டின் சிறு பகுதியான தங்களுக்குரிய அறைக்குள் அந்தத் துப்பாக்கி வில்— அம்பு சாமான்களைக் கொண்டு வந்து வைக்கிறாள்...

அடுக்குமாடியுள்ள பெரிய வீட்டில் சிறிய இரண்டறைகள்...

இப்படியெல்லாம் ஆகுமென்று யாரோ நினைத்தார்கள்?

அவள் கல்லூரிப்படிப்புக்காகச் சென்னை வாசம் புரியவந்து ஆறாண்டுகளாகி விட்டன.

அவளுடைய தாயகம், ஈழத்து மண்தான்: மூன்று தலைமுறைகளுக்குமுன் கரிசல் சீமையில் இருந்து, இலங்கை மலைக் காட்டை அழித்துத் தேயிலைத் தோட்டம் போட, வெள்ளைக் காரனின் கையாள் வசம் தங்களை ஒப்புவித்துக் கொண்ட பரம்பரையில் வந்தவள் அவள்; அவளுக்கு அந்தச் சிறுமைகள் தெரியாது. ஏனெனில், வாழ்க்கையில் அரும்பாடுபட்டு, கடையும் தொழிலுமாக, முன்னேறி விட்ட தந்தைக்குச் செல்வ மகளாக உதித்திருந்தாள்.

யாழ் நகரிலும், வவுனியாவிலும், அவருக்குச் சொந்தமான பலசரக்குகடைகள் இருந்தன. சென்ற ஆண்டில் படிப்பு முடிந்து அவள் அந்தத்தாயகம் திரும்பவில்லை. அந்த அவளுடைய தாயகத்தில் இருந்து, அவளுடைய தாயும் தந்தையும், வீடு, கடை, கட்டிளங்காளையான ஒரே செல்வன், எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு, இங்கே வந்து வீழ்ந்திருக்கின்றனர்.

மங்கையின் தாயகம் என்பது அந்தச் சொர்ணத் தீவுதான். விடுமுறைக் காலங்களில் அங்கு சென்று வளமையின் இன்பங்களில் மிதந்தபோது, முதலாளியின் செல்வமகள் என்ற உணர்வுதான் இருந்தது. பல சிநேகிதிகளை அழைத்துச் சென்றிருக்கிறாள். விரும்பிய நேரத்தில் விரும்பியதை உண்டு, உடுத்தி, வீடியோ, சினிமா என்று அளித்து, உல்லாசமாகக் காரில் திரிந்து விட்டு வந்த நாட்கள் அவை. இங்கே அந்தச் சிநேகிதர்களுக்கெல்லாம் இலங்கை என்றால் அயல் நாட்டில் உற்பத்தி செய்யும் ஆடம்பரப் பொருளை அள்ளிவரும் சொர்க்கத்தீவு. மங்கைக்குச் சென்ற ஆண்டில், இவள் தாயும் தந்தையும் கட்டிய துணியோடு, பானை வயிறும், சிரங்குத்தலையுமாகத் தாயோடு ஒட்டிக் கொண்ட இந்தப் பாலகனுமாக வரும்வரையிலும், தன் மூதாதையர் பற்றியோ, அவர்கள் இடம் பெயர்ந்து காட்டை நாடாக உழைத்து, மீள முடியாமல் மீண்டும் மண்பெயர்ந்தும் இடம் பெயராமல் அல்லாடும் ஒரு வர்க்கத்தினர் பற்றியோ, சூழ்ந்த பிரச்னைகளுக்கான கடும் உணர்வுகளின் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

இவள் வாழ்வில், எண்ணங்களில், சிந்தனைகளில் பெரும் புரட்சியையே அந்தக் கோலம் விளைவித்திருக்கிறது. தந்தை எங்கோ ஓர் அச்சகத்தில் வேலை செய்கிறார். எப்படியோ அவளுக்காக, அவர்கள் பிழைக்கிறார்கள். கூட...இந்த மழலைப் பையன்.

அன்றாடம் சென்ற ஆண்டில் இருந்து விமான நிலையத்திலும், ரயிலடியிலும், பச்சை கருக்கிய, வேர் பிடுங்கப்பட்ட மனிதத் தொகுதிகள் இங்கே வந்து நெருங்கப் பார்க்கையில், முன்பு சிறகடித்துப் பறந்த மலர்ச்சிகள் கனமாகி, உறுதியாகி அவளுள் உரம் பெற்றது நம்பிக்கையாக.

...ஓ...நான் பிறந்த மண்! அது, அந்த ஸ்நேகமான மண்பசுமைகள், வன்மைகள்...! அது பற்றி எரிகிறது. எனக்குப் பிரியமான புன்னகைகள், இதமான ஏரிகள், கிழித்துக் குருதி பீரிடக் குலைக்கப்பட்டிருக்கின்றன.



துப்பாக்கியை எடுத்து அவள் கடுமையுடன் குறி பார்க்கிறாள்.

"செல்வா? உன்ர அம்மாவைப் பார்க்க வேண்டாமா? அப்பாவைப் பார்க்க வேண்டாமா? மிரியம், மாரி, மாதுரி எல்லாரையும் பார்க்க வேண்டாமா?"

சோர்ந்த முகத்துடன் வாயில் விரலைப் போட்டுக் கொண்டு அவன் தாயின் மடியில் அமர்ந்திருக்கும் அந்தப் பாலகனை அவள் உசுப்புகிறாள்.

"...அவங்கல்லாம் செத்துப் போயிட்டாங்க..."

மங்கை காலால் தரையை ஓங்கித் தட்டுகிறாள்.

செத்துப் போகலை. உன்னுர அம்மா, அப்பா, மிரியம், மாரி, மாதுரி எல்லாம் ஜெயில்ல இருக்காங்க. செல்வன் எல்லாரையும் மீட்டு வராண்டாமா?"

"இல்ல. எண்ட அம்மா இதோ..."

"இல்ல. இது எண்ட அம்மா..."

சிவகாமியினால் இந்த வார்த்தைகளைக் கேட்க இயலவில்லை.

"மங்கை குழந்தையிடம் போய் நிதமும் நீ தொல்லை குடுக்கிறே! நீ ட்யூஷன் எடுக்கப் போகலியா இன்னைக்கு?"

"இன்னைக்கு ட்யூஷன் இல்ல...செல்வா, இப்படி வா?"

"அம்மா! மங்கையை அடிக்கோணும், நீங்க எண்ட அம்மா இல்லை என்கிறாங்கள்!"

அவன் இறுகக் கட்டிக் கொள்கிறான் சிவகாமியை.

"மங்கை குழந்தை மனசில் ஏன் கலகத்தை உண்டு பண்ணுற?"

"கலக்கம் ஒண்டுமில்லை. நான் உண்மை சொன்னன். அவண்ட அம்மாவாக நீங்கள் இப்ப இருக்கலாம். ஆனால் சொந்த அம்மா இல்லை"

"அவ தான் போயிட்டாளே, புள்ளயத்தூக்கி எறிஞ்சா...நம்ம மடில விழுந்திருக்கு...ஒரு கண்ணத் தோண்டி எறிஞ்சாப்பல, என் பையனைப் பாவிங்க கண்ணு முன்ன சுட்டாக..."

சிவகாமி அழத் தொடங்குகிறாள்.

பையனின் விழிகள் நிலை குத்தினாற்போல்— ஒருகணம் தோன்றுகிறது. மெல்லிய உடல் நடுங்குகிறது. 'அம்மா!' என்று அலறுகிறான்.

''வாணாம் கண்ணு... வேத்துப் போவுது பாரு...மங்கை, நீ ஒண்ணும் சொல்லாதேம்மா!'

மங்கை பேசாமல் எங்கோ வெற்றிடத்தில் இலயிக்கிறாள்.

அந்தப் பயங்கரங்களின் நேர் அனுபவம் அவளுக்கு ஏற்படவில்லை.

ஆனால் நினைக்கவே இரத்தம் உறையும் திகில் கவ்வும்படி இருக்கிறது.

தப்பி ஓடும் மக்களைக் கொண்ட பஸ்ஸைக் காடையர் சூழ்ந்து தேன் கூட்டில் பந்தம் காட்டுவதை விடக் கொடிய வகையில் பெட்ரோல் ஊற்றித் தீ வைக்க...

பச்சைச் சடலங்கள்... ஐயோ...!

ஒரு தாய்...தன் செல்வனைப் பலம் கொண்ட மட்டும் தூக்கி எறிய...

அந்த மனிதத்தளிர், ஒரு கருணைத்துளியில் நனைய...

குழந்தை யார் எவர் தெரியாது. வீடு கொள்ளையடிக்கப்பட; பிள்ளையைப் பலி கொடுத்துவிட்டு அவள் தாயும் தந்தையும் அபயக் கொட்டகையில் அண்டிய நேரத்தில், இந்தப் பிஞ்சு சிவகாமியின் மடியில் அடைக்கலமாகப் புகுந்தான்.

மாதுரி, அம்மா...என்று விக்கி விக்கி அழுதது பிள்ளை.

பிறப்பெடுத்த மண்ணில் தொழில் புரிந்து சீவிக்க, மனிதராகப் பிறந்த வாழும் உரிமைகள் மறுக்கப்படுவது எத்துணை கொடுமை?

படுத்திருக்கும் புத்தர், உட்கார்ந்த புத்தர், நின்ற புத்தர்...!

அஹிம்சை வடிவங்கள் கண்களை மூடிக் கொண்டனவோ?' கண்களைப் பிடுங்கி எறிந்துவிட்டார்களோ?

இந்தச் செல்வனைப் போல் எத்தனை செல்வர்கள்?

அம்மா அவனைத் தட்டி உறங்கச் செய்கிறாள்.

நேரங்கெட்ட நேரத்தில் மாலை ஐந்துமணி வேளையில் உறக்கமோ?

உறங்கக் கூடாதடா பிள்ளாய்! நீ உறங்கக் கூடாது!

பிறந்த மண்ணின் உரிமை, அங்கே ஊன்றித் தளிர்த்துச் செழித்துச் செழிக்க வைக்கும் உரிமையை விட்டுக் கருணைப் புகலிடம் தேடி, பஞ்சத் ஆண்டியாகப் பிழைக்கும் நிலையில், உறங்குவதோ?

''அம்மா! அவனை இப்ப உறங்கப் பண்ணாதேயும்!''

''அவன் பயந்து போறான் மகளே இன்னமும்! அது என்ன கோரங்கள் இன்னும் மறக்காமல் இருக்குமோ?''

அம்மா பயத்தில் அவன் உரிமை உணர்வு மூடிப்போயிருக்கும். அது கிழிச்சிட்டு வரணும். பயம், கோரம் எல்லாம் எங்கேயோ இருக்கும் வரையிலும் தான். அது எங்கள்ட வீட்டிலே பூந்து எங்கம்மை அப்பனை உயிரோடு தீச்சுட்டுது. எல்லாம் விழுங்கித் தீர்த்தப்புறம் எங்கிருந்து பயம்? அவண்ட பயத்தை உறங்கப் பண்ணிப் போக்காதீம் அம்மா! உணர்வு பயத்தைக் கிழிச்சிட்டு வரணும் பயம் தொலையும்...

மங்கை அவனை மெல்லத் தூக்கி எழுப்புகிறாள்.

''நேரங் கெட்ட நேரத்தில உறங்கலாமோ? செல்வா, நீ நல்லபையன். இப்பம் அண்ணன் மாரெல்லாம் வரும். உனக்கு விளையாட்டுச் சாமானெல்லாம் வாங்கி வருவேன். புஸ்தகம்... பொம்மை... ஆனால், அந்தச் சின்னஞ்சிறு இதயத்தின் புண்ணான வடுக்களின் ஈரம் மாற வில்லையே? அவன் கண்களை மூடி உறங்கத்தான் உறங்கு கிறான்,

சிவகாமி சிறுவனை மெத் தென்ற துணி விரித்து விடு கிறாள்.

கார்த்திகைக் கருக்கல். கொசுக்கள் ஆளையே தூக்கிச் செல்லும் வலிமையுடன் அப்பு கின்றன.

மங்கை சன்னலில் அமர்ந்து வெளியே பார்க்கிறாள்.

சிவகாமிக்குத் தன் மகளை நினைத்து இப்போது கிலியாக இருக்கிறது.

இளைய தலைமுறை: இவள் கொதித்துப் போயிருக்கும் இளைஞர்களுடன் தோழமை யும் நட்பும் ஆலோசனைகளும், செயல் திட்டங்களும் என்று பொழுதை ஈடாக்குகிறாள். இளையவர்கள் எவ்வளவு பேரை வேட்டையாடுகிறது அரசு! அய்யோ? ஐநூறு ஆயிரமாய் பிள்ளைகளைக் கடத்திச் சென்று சுடுகிறார்களாம், தாய்மார் திரண்டுசென்று மீட் கப் போராடுகிறார்களாமே! பச்சைப் படுகொலைகள் அன் றன்று செய்தியில் இங்கே எட்டு கையில், இந்த இளம் தலை முறையினர் அமைதி காண் பரோ?

கடல் கடந்தாலும் சிவகாமி யைக் கிலி கவ்விக் கொள்கிறது.

''மங்கை,.....நீ......அந்த...... அந்தப் பையன்களுடன் பேசு வதும் நடப்பதும் ... உன்னை ஏன் சம்பந்தப்படுத்திக் கிடணும்மா! அப்பா சொல் றார்.

''செல்வனை இங்கே ஏதோ ஆசிரமத்தில் சேர்த்தடலாம்னு: நமக்கு இதான் தாய் மண்ணு: நாமும் அவங்களும் ஒண்ணாக மாட்டோம்...நம்ம தேசம் இங்கே கடல்போல இருக்கு: ஏதோ சாவோ, பிழைப்போ, தாய்மடியில் வந்து விழுந்திட் டோம்...எனக்கு ரொம்பப் பய மாயிருக்குதடி கண்ணே, எங் களுக்கு இருப்பவ நீ ஒருத் திதா...''

சிவகாமி அழுது விடுகிறாள். மங்கை பேசவில்லல.

''அந்த இயக்கப் பொடியள்... அவங்கல்லாம்...ராவோடு வாரதும்.... பேசுறதும்... வாணாம்மா...!''

அவள் தாயின் குரலில் கரைந்து போகும்படி தானிருக் கிறாள்.

அம்மா...அம்மா... எப்படி இருந்தவள்! முடிகொட்டி, முப்பது வயசு... மூத்துவிட்ட மூதாட்டியாக நலிந்து...இந்தச் சரிவுகள் எப்படி...எப்படி? வந் தன? கோபுரத்தின் மீது வீற்றி ருந்த சிற்பம் தகர்ந்து குப்பை மேட்டில் விழுந்தாற்போன்று... எப்படிப் போனார்கள்?

ஆனால்... மண்...மண்ணுக்கு வேறுபாடா? ஒரு மொழிபேசும் இமைகளல்லவா? மனிதர் மனிதரால் அல்ல—மிருக வெறி யர்களால் கொடுமைப்படுத் தப்படுவது? மனிதன் என்று நினைப்பவர்கள் கொடுமை களுக்கெதிராகத் தம்மை ஐக்கி யப்படுத்திக் கொள்ள வேண்டாமோ?

[தொடர்ச்சி 39-ம் பக்கம்]

# பலியாகிப்போன பலிபீடங்கள்...!

மதுரா

எங்கள் பிதாவே!
அவர்களை மன்னியும்!

எங்கள் உணவை
அவர்கள் பறித்துக்கொண்டு
போனார்கள்—நாங்கள்
பசியோடு இருக்கையில்!

பிதாவே!
அவர்களை மன்னியும்!

எங்கள் தேசங்களில் இருந்து
எங்களை அவர்கள்
விரட்டியடித்தார்கள்!
நாங்கள் தேசங்களை
இழந்த தேசபக்தர்களானோம்!
பிதாவே!
அவர்களை மன்னியும்!

எங்கள் ஆடைகளை
அவர்கள் களைந்து கொண்டு
போனார்கள்!
நாங்கள் நிர்வாணமானோம்!
பிதாவே!
அவர்களை மன்னியும்!

எங்கள் பொக்கிஷங்களை
அவர்கள் திருடிக்
கொண்டு போனார்கள்!
பரலோகத்தில் எங்களுக்காகச்
சேமித்து வைத்திருக்கும
திரவியங்களையும்
அவர்களுக்கே அருளும்!

பரலோகத்திலிருக்கிற
எங்கள் பரம பிதாவே!
எங்களுக்காக
அவர்களை இரட்சியும்

முப்பது காசுகளுக்காகக்
காட்டிக் கொடுத்த
யூதாசின் வழித்தோன்றல்கள்
இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதால்
மீண்டும் மீண்டும்
சிலுவையில் நாங்கள் தினம்
அறையப்படுகின்றோம்!

பிதாவே!
இவர்களை மன்னியும்!

நரலோகத்தில் இருந்து
அனுப்பப்பட்ட பாம்புக்குட்டிகளும்
பூலோகத்திலுள்ள
பூனைக் குட்டிகளும்
உரிமைகளுக்காகப்
பிராண்டிக் கொண்டிருக்கின்றன!

ஒரு கன்னத்தில்
அறைந்தபோது மறுகன்னத்தையும்
காட்டத் துணிந்த
மனுமகனே!

இழப்பதற்கு உயிரைத் தவிர
ஏதுமில்லாத போது
இரட்சிப்பு எங்களுக்கு
எதற்காக?

பலிபீடங்களே
பலியாகிப் போன பின்பு
பலி பூசைகளை நாங்கள்
எப்படி மேற்கொள்வோம்?

உன்னுடைய தேவாலயத்துள்
சாத்தானின் பிரவேசம்!
திரியில்லாத மெழுகாக
மனிதச் சதைக் குவியல்!

பிதாவே!
இவர்கள் செய்வது
இன்னதென்று அறியாமல்
செய்கிறார்கள்! ஆதலால்
இவர்களை மன்னியும்!

எங்கள் இரத்தத்தால்
அவர்கள் அபிஷேகம்
பண்ணுகிறார்கள்!
இவர்களை இரட்சித்து
அப்பத்தை அவர்களுக்கு அருளும்!

பிதாவே!
இவர்களை மன்னியும்!
இவர்கள் செய்வது
இன்ன தென்று அறியாமல்
செய்கிறார்கள்!

# போராளிகள்!

## ஜெயகாந்தன்

### இலங்கையின் இனப் பிரச்சனை!

இராணுவத்தின் மூலமோ, அடக்குமுறையின் மூலமோ அந்நியக் கொலைகாரரின் உதவியின் மூலமோ இன்றைய இலங்கைப் பிரச்சினையை ஜெயவர்த்தனா தீர்த்துவிட முடியாது என்பது கடந்த ஓராண்டுக் கால 'நடவடிக்கைகளில் இருந்து தெரிகின்றது. அதுபோலவே ஒரு தேசத்தின் ஏற்றத்தாழ்வு பிரச்சினைகளை நெடுங்காலமாக நிலவி வருகின்ற சமூதாயக் கொடுமைகளை, சுரண்டலைச் சிறு சிறு தாக்குதலின் மூலம் தீர்த்துவிட முடியாது என்பதை இந்த அண்மைக்கால அனுபவங்கள் ஈழத்துப் போராளிகளுக்கு உணர்த்தியுள்ளன.

### போராளிகளுடன் பேச்சு வார்த்தை!

அண்மையில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாடு ஒரு பலனும் தரவில்லை, ஏன் என்றால் இதில் போராடுபவர்களுக்கு இடம் அளிக்கப்படவில்லை. ஆகவே போராளிகளை உள்ளடக்கி இந்த வட்ட மேஜை மகாநாடு நடத்தப்பட்டால்த் தவிர, அரசியல் தலைவர்களோடு பேசுவதனால் மட்டும் ஒரு பலனும் ஏற்படாது. தொடர்ந்து இது போன்று பல முயற்சிகள் நடைபெற்றுத் தோல்வியடைந்திருக்கின்றன.

### மக்கள் அணி!

இது மறுபடியும் மறுபடியும் சமரசத்திற்கான ஒருவகைப் பலவந்தமாக இருந்ததே தவிர பிரச்சினைகளைத் தீர்ப்பதாக இருக்கவில்லை. மறுபடியும் மறுபடியும் இனக் கொலைகள் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் ஏதாவது ஒரு சமரசத்திற்கு வராவிட்டால் நீங்கள் மேலும் கொல்லப்படுவீர்கள் என்பது மாதிரித்தான் இந்த வட்ட மேசை மகாநாடு இருந்தன. ஓர் இனத்தின் மீது இன்னொரு இனம் நடத்துக்கின்ற சதிச் செயல், அக்கிரமங்களை எதிர்த்து, இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற கோபாவேசத்துடன் ஆங்காங்கே பல இளைஞர்கள் கிளர்ந்து எழுந்ததன் விளைவே இன்று பல விடுதலைப் போராட்ட அணிகளின் தோற்றமாகும். பரந்துபட்ட மக்களை உள்ளிட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி உருவாவதன் மூலம்தான் இந்தப்போராட்டம் முழுமை பெறமுடியும்.

### போராளிகளுக்கு ஆதரவு!

ஒரு விடுதலை இயக்கத்தின் முன்னால் இலட்சியமும் அதன் பின்னால் மக்கள் பலமும்,

தத்துவமும், தொழிற்சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களின் பலமும் இருத்தல் வேண்டும். இலங்கையில் இருக்கின்ற முற்போக்கு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு முழுப் புரட்சியை உண்டாக்க முயல வேண்டும். இதற்கு இலங்கையில் சித்தாந்த ரீதியாக —இருக்கின்ற அறிவாளிகள், அறிஞர்கள், கலைஞர்கள், அனைவரும் ஒன்றுபட்டு இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும். தற்போதைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்ற ஈழப் போராளிகளுக்கு நன்றி சொல்லவும் அவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். இந்தப் போராளிகள் ஏதோ ஆயுதம் தூக்கி விட்டார்கள் என்று நாம் இவர்களை ஒதுக்கிவிடக் கூடாது; ஊக்கம் கொடுக்கவேண்டும்.

## ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி!

எப்படி வர்க்கப் போராட்டம் நடத்துவது? எப்படிச் சோஸலிச மாற்றத்தை ஏற்படுத்துவது? என்பது யாரும் சொல்லிக் கொடுத்து வந்து விடுவதல்ல, அது அவரவர் அனுபவத்திலே வருவது, சிங்கள இடதுசாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தாமல் புரட்சியை ஏற்படுத்துவது கடினம். இது புரட்சிகர அனுபவத்தினால் உணரப்படவேண்டிய ஒன்றே தவிர, தமிழன் என்ற இன உணர்வால் ஏற்பட முடியாது. இலங்கை முழுவதும் தழுவிய ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியை ஏற்படுத்தாமல் இதைச் சாதித்தல் கடினம். உலகப் புரட்சிக்காரர்கள் என்பவர்கள் சர்வதேசத் தொடர்புடையவர்களாக இல்லாவிட்டால் கலகக்காரர்கள் என்ற இழி நிலையைப்பெறுவார்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கின்ற சர்வதேச வெளிச்சத்தில் உள்நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்தல் என்ற நிலைமை இலங்கையில் உருவாகின்ற போதுதான் பிரகாசமான எதிர்காலத்தை அங்கு எதிர்கொள்ள முடியும். நமது போராட்டத்தைத் தொடர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கின்ற பரந்துபட்ட அணி இலங்கையில் உருவாவது தான் இப்போது மிகவும் முக்கியம். ஏகாதிபத்தியத்தோடு இலங்கையில் இருக்கின்ற ஆளும் வர்க்கம் வைத்திருக்கின்ற தொடர்புகளினால் மிக விரைவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு அங்கே மக்கள் மத்தியில் ஏற்படும். சகல பிரிவினருக்கும் பிரிவினை நல்லதல்ல. சில சமயங்களில் அது நிலைமைகளைப் பொறுத்தே சொல்ல முடியும். பொத்தாம் பொதுவாகக் கணிக்க முடியாது.

## பிரிவினையின் அம்சம்!

இந்தியாவின் அனுபவத்தை ஒட்டிப் பார்க்கும் போது பிரச்சினைகளைப் பிரிவினை தீர்த்து விடும் என்ற கருதுவதற்கில்லை. எங்கள் அனுபவம் அப்படித்தான் சொல்லுகின்றது. இரண்டு விதமான சமூக அமைப்புகள்—சோஸலிச, முதலாளித்துவ சமூக அமைப்புக்கள் ஒரு நாட்டில் நேருவதற்கு உத்தரவாதம் இருக்கும் பட்சத்தில் ஒருபுறம் ஏற்படும் அந்தப் பிரிவினையை யாரும் தடுத்துவிட முடியாது. அப்படிச் சமூக அமைப்பில் எவ்வித மாறுதலும் இல்லாமல் ஆகிவிடும் பிரிவினை ஆபத்தை நாம் ஆதரிக்க

முடியாது. வட வியட்நாமிலும் வட கொரியாவிலும், கிழக்கு ஜெர்மனியிலும் இதுதான் நடந்தது. பின்பு இன்னொரு பக்கம் ஏகாதிபத்தியத்திற்குப் போய் விடுகின்றது. ஆகவே இந்தச் சின்னத் தீவில் இரண்டு தேசிய இனங்கள் சமத்துவமாக வாழுகின்ற ஒரு சமதர்ம சமுதாயத்தைத்தான் அண்டை நாடு விரும்ப முடியுமே தவிர அவர்கள் இரண்டுபட்டு என்றைக்கும் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்ப முடியாது.

## தவிர்க்க முடியாத பட்சத்தில்...

பங்களாதேசம் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாகத்தான் இருக்கின்றது. பாகிஸ்தானும் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாகத்தான் இருக்கிறது. இந் நிலை இலங்கைக்கு வந்துவிடக் கூடாது என்றுதான் நாங்கள் விரும்புகின்றோம். இதில் நாங்கள் மிகவும் அக்கறையாக இருக்கின்றோம்: இன்னொரு மாறுபட்ட சமூக அமைப்பிற்கு ஏதோ ஒரு பகுதி உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் பிரிவினை தவிர்க்க முடியாததாகிறது: கொரியாவில் ஒருபகுதி சோஸலிசமாகிப் பிரிந்து புதிய நாடாகச் சென்றதை நாம் இங்கு நினைவு கூரலாம்.

## முற்போக்குச் சக்திகளின் உதவி

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு, தமிழ் இளைஞர்களுக்கு எதிராக, அவர்களை அச்சுறுத்துகின்ற, அவர்களைப் பணிய வைக்கின்ற, அவர்களைச்

## மனிதம்...

[35-ம் பக்கத் தொடர்ச்சி]

"அம்மா? நம்மில் மனிதத்துவம் சாக வேண்டும் என்றா நீங்கள் சொல்லுவீர்? அவங்க— மனிதத்தொகுதிகளை, கட்டவிழ்க்கப் பெற்ற மிருகவெறி துரத்தி வேட்டையாடும்போது, ...பயமென்ன பயம்? நாடு நகரம், வீடு, பள்ளின்னு வேட்டை நடக்கையிலே நாம ஒதுங்கிச் சுகசீவனம் பண்ணுவது மனிதமா? அம்மா, உலகில் எங்க எது வந்தாலும் மிருகவெறியில் ஆணைக் கொல்றாங்க, பெண்... பெண்ணைக் கசக்கி உசிர் குடிச்சுப் போறாங்க! இந்தப் பொடியனைப் போல எத்தனை பொடிகளை விட்டுப் போட்டுத் தாய்மாரை என்ன செய்தாங்க?...உங்கட பிள்ளை- வலுவான பிள்ளையை என்ன செய்தாங்க? இந்தக் கொடுமைகளுக்கு நாம் ஆருன்னு இனம் காட்டணும். இது வெறும் இனப்பிரச்சினை இல்ல. மண் பிரச்சினை இல்லை. மனிதத்துவத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் பிரச்னை. என்னை ஒதுங்கச் சொல்லாதீர்? பயந்து பயந்து ஒதுங்கிப் போகாமல்: பயத்தைக் கிழிச்சிட்டு என் உணர்வுகள்...ஆமாம்.. மனித உணர்வுகள்...அது கொழுந்து விடணும்...

மங்கையின் முகம் பிழம்பாக ஜொலிக்கிறது.


தாய் கண் கொட்டாமல் நோக்குகிறாள்.

சரணடைய வைக்கின்ற சர்வ தேசரீதியாக அவர்களுடன் இருக்கின்ற அனுதாபச் சக்திகளைச் சிதைத்து விடுகின்ற — முயற்சியில் இலங்கையிலுள்ள ஏகாதிபத்தியச் சார்பு அரசு தொடர்ந்து ஈடுபடும். இதனை எதிர்த்து உண்மையாகவே ஈழ மக்களின் விடுதலைக்குப் போராடுகின்ற, அதாவது அரசியல் பொருளாதார வெகுஜன அமைப்பைத் திரட்டுவதற்கு அங்கேயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியையும் கேட்டுக் கொள்ள வேண்டும். ஒரு தேசத்தில் உள்ள கம்யூனிஸ் கட்சி எவ்வளவு தளர்ச்சியாக சோம்பிக் கிடந்திருப்பினும் அதில் எவ்வளவு மத்தியதரப் பண்புகள் குடி புகுந்திருப்பினும் கூட நாம் அவர்களைப் பயன்படுத்தவேண்டும். ஏனெனில் அவர்கள் முக்கியமாகச் சர்வதேசத் தொடர்புடையர்களாக, ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக இருக்கிறார்கள். அவர்களையும் இந்த அணியில் சேர்த்துக் கொள்வதன் மூலம்— ஒரு பெரிய இலட்சியத்தை முன்னேற்றுப் போராடுகின்ற— கட்சி என்பதனால் இயன்ற அளவில் அவர்களது பங்களிப்பும் இதில் முக்கியம். இதன்மூலம் தீர்வுஇலகுவாகின்றது.

## வர்க்கப் புரட்சி

இது வர்க்கப் புரட்சியும்— வர்க்க சமரசமும் உலகெங்கும் பரவலாக நடந்து வருகின்ற காலகட்டமாகும். இலங்கையில் உள்ள தமிழ் மேல்வர்க்கத்தினர் புதிதாக ஏகாதிபத்தியத்திற்கு அடிமை புக வேண்டாம். அவர்கள் ஏற்கனவே ஏகாதிபத்தியத்திற்கு அடிமை புகுந்தவர்கள். அங்கே போராடுகின்ற புரட்சியாளருக்கு வருகின்ற தொல்லைகளையெல்லாம் இந்த மேல் வர்க்கத்தைச் சேர்ந்த தமிழர்களால்தான் ஏற்படுகிறது. இளைஞர்களைப் போராட்டக் களத்தில் உணர்ச்சியூட்டி இறக்கி விட்டு, எதிரி வர்க்க சமரசத்திற்கு சமிக்ஞை காட்டுபவர்களும் இளைஞர்கள் சமரசத் தீர்வுக்கு வரும்படி கேட்பவர்களும் அவர்களே ஆவர். விடுதலைக்குப் பதிலாக வர்க்கச் சமரசத்தை வைத்துக் கொண்டு சிங்கள மக்களுக்கு எதிரான இனவெறியைத் தூண்டுபவர்களும் பின்னர் சமரசத்திற்கு முன்நிற்பவர்களும் இதே இனத் துரோகிகளே. எனவே தமிழ் மேல் வர்க்கத்தினர் மூலம் சிங்களப் பேரினவாதிகளைப் பணிய





வைத்திட முடியாது. போராளிகளுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு அறுந்து போவதே நல்லது. பரந்துபட்ட தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பலி கொடுத்துத் தமது நலன்களைப் பாதுகாக்கவே போராளிகளுக்கு உதவி செய்வதுபோல் இந்த மேல் வர்க்கத் தமிழர்கள் பாசாங்கு செய்தார்கள். அவர்களுக்கு அமெரிக்காவின் நலனைப் பாதுகாப்பதுதான் முக்கியம்; ஈழத்திலுள்ள இளைஞர்களின் நலனைப் பாதுகாப்பதோ—அவர்களைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பதோ முக்கியமல்ல. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தற்கே இவர்கள் காத்திருக்கின்றார்கள். உலகம் பூராவும் இளைஞர்கள் புரட்சியால் கவரப்பட்டிருக்கின்றார்கள். புரட்சி என்ற சொல் மனிதனை நன்கு வசீகரிக்க வல்லதாகி விட்டது. எனவே, அதை வைத்து வியாபாரம் நடத்துமளவிற்கு மேல் வர்க்கத் தமிழர்கள் துணிந்துவிட்டனர் இலங்கையில்.

## இலங்கை—இந்திய உறவுகள்

இந்தியா இலங்கை மீது படையெடுக்கப் போகின்றது என்ற பீதியை இலங்கை அரசு மக்களிடையே பரப்பி வருகின்ற போதும் கூட இலங்கை அவ்வளவு இலகுவாக அமெரிக்காவை நம்பி இந்தியாவைப் பகைத்துக் கொண்டு விடமுடியாது. அமெரிக்கா இலங்கைக்குச் செய்கிற உதவியை விட இந்தியா இலங்கைக்குத் தேவையான சமூக பொருளாதார கலாச்சார உதவிகளை செய்ய இயலும்.

இந்தியாவோடு எப்படியாவது ஒரு மோதலை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை அரசு முயல்வது — இலங்கை மக்களே முற்றிலும் அனுமதிக்க முடியாத விடயம். இலங்கை மக்கள் இதை விரும்பவே மாட்டார்கள். அண்மையில் நடந்த இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் இராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்களின் வாழ்க்கையை மட்டும் பாதித்து விடுகின்ற விசயம் அல்ல. அது அரசியல் ரீதியாக இந்தியாவை வம்புக்கு இழுக்கின்ற செயலாகும். இப்படிப்பட்ட செயல்களை எங்களைச் சுற்றியிருக்கின்ற எல்லோருமே பங்களாதேஷ், பாகிஸ்தான், சீனா இன்னும் சில சின்னச் சின்ன நாடுகள் கூடச் செய்கின்றன. இது குறித்து இந்தியாவில் உள்ள பாதுகாப்புப் படையினர் இது ஒரு யுத்தமாக மோதிவிடக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாக இருக்கின்றார்கள். இரண்டு பெருக்

கும் மீன் பிடிக்கின்ற இடத்தில் அவர்கள் எல்லையைப் பாது காப்பது என்ற பெயரிலே நம்மை வம்புக்கிழுக்கின்ற போது, அவர்கள் எல்லையை யும் நமது பொறுப்பில் நாம் பாதுகாக்க நேரிடும்.

## தீவிரம்....

தற்போது நடந்த இந்தத் தேர்தலுக்குப் பிறகு இலங்கைப் பிரச்சினை தீவிரமடையும். இவ்வளவு காலமும் இருந்த மாதிரி இதை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என இந்தியா கருதாது. இந்திய அரசு அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கும் என்று கருதலாம்.

இந்தியாவின் எதிரிகள் ஏன் இந்தியாவின் எதிரிகளாக இருக்கின்றார்கள்? இந்தியா ஏகாதிபத்தியத்தின் எதிரியாகவும், காலனியாதிக்கத்தின் எதிரியாகவும், போராடுகின்ற நாடுகளுக்கு நண்பனாகவும், இன வெறிக்கு எதிராகவும் உலக அரங்கில் சுதந்திரத்திற்குப் பின் ஒரு கணிசமான பணியை ஆற்றி இருக்கின்றது. எனவேதான் ஏகாதிபத்தியத்திற்குப் பலியான எமது அண்டை நாடுகள் பல இந்தியாவை எதிர்க்கின்றன. அவர்களுடைய நோக்கம் அப்படிப்பட்ட ஒரு ஏகாதிபத்திய ஆதரவான ஒரு அரசாட்சியை இந்தியாவில் கொண்டு வருவது தான். அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டமே ஆசியாவின் இருக்கின்ற பல நாடுகளுக்கு நடுவே மாபெரும் காலனியாதிக்க எதிரியாக உறுதியாக நின்று இருக்கின்றது என்பதுதான். இந்திய விரோத கொள்கையை இந்தியாவைப் பற்றிய பீதியை, இந்தியா ஆக்கிரமிப்பு செய்து விடும் அல்லது இந்தியாவில் இருந்து தங்களுக்குத் தீங்கு வந்துவிடும் என்ற பிரச்சாரத்தை இலங்கை மக்கள் ஒருபோதும் நெடுங் காலத்திற்கு நம்பமாட்டார்கள். இந்திய விரோத உணர்வைத் தூண்டுகின்ற அந்தச் சிங்களவர்கள் யார் என்று சிங்களவர்க்கே தெரியும். ●

---

○ "... வீரமிக்க வாலிபர்களே! சுதந்திரம் தானே வந்து விடாது! மரணவேதனையையும், துன்பத்தையும் விலையாக்க் கொடுத்துத்தான் தாய் தன் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். இரத்தத்தைச் சிந்தியே ஆகவேண்டும்.

புதிய சுதந்திர தேசம் வேண்டுமானால் அதற்குரிய விலையாகக் குருதியைக் கொட்டியே ஆகவேண்டும் தேவையாயின் உயிரையும் தியாகம் செய்தே ஆகவேண்டும்.

அகிம்சையும், கோழைத்தனமும் விடுதலையை வாங்கித் தரப் போவதில்லை. தீரமும் தியாகமுமே விடுதலையைப் பெற்றுத் தரும். போர்ராட்டங்களைத் தவிர்க்க முனைவது கோழைத்தனம். புரட்சிக்காரர்கள் குழப்பவாதிகளோ, பயங்கரவாதிகளோ அல்லர், தேவையாயின் வன்முறையைப் பிரயோகிக்கத் தயங்குபவர்களும் அல்லர். தன்னலமில்லாத, நாட்டு நலன் ஒன்றையே உயிரெனக் கருதும் ஒரு சில ஆயிரம் பேர் ஆண்களும், பெண்களுமாகக் களத்தில் இறங்கினால் ஆட்சியை நொடிப் பொழுதில் கடலில் வீசி யெறியலாம்..."

'புரட்சிக்காரன்' முதல் இதழில் 'சன்யால்'

# போராட்ட வடிவத்தை மக்களே தீர்மானிக்க வேண்டும்...!

● ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் அடக்குமுறையின் கொடூரம் தாங்காது தம் இழந்துவிட்ட இறைமையைக் காப்பாற்ற மார்க்ஸிய-லெனினியச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது பற்றி உங்கள் கருத்து யாது?

○ தமிழ்மக்கள் என்று மட்டுமல்ல; உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெற மார்க்ஸீய லெனினிய அடிப்படைகளே வழிகாட்டுவன. மார்க்ஸீயம் என்பதை ஒரு இறக்குமதிச் சித்தாந்தமாகச் செயல்படுத்தும்போது அது விடுதலைக்கான வழிகாட்டுவதில்லை; மாறாக இன்னொரு வட்டத்தில் குறுக்கிவிடும் ஆபத்து உள்ளது. எனவே மண்ணுக்கேற்ற வகையில் மார்க்ஸீயக் கோட்பாடுகளைக் கையாளுவது என்பதே வழிமுறையாகும். இந்த விஸ்தரிப்புக்கு இடம் கொடுக்கும் வகையில் மார்க்ஸீயம் உள்ளதென்றே நான் நம்புகிறேன்.

ஈழப் போராட்டத்தில் உள்ள முதன்மையான கூறு தேசிய இன அடிப்படைதான். என்றபோதிலும், போராட்டத்தின் அடுத்த வளர்ச்சிக்கட்டம் இன அடிப்படையைத் தாண்டிச் செல்லவேண்டியதாகக் கருதுகிறேன். ஒடுக்குபவர்கள். இனத்தை ஒடுக்குமுறைக்கான காரணமாகக் கொண்டிருப்பதாலேயே இன அடிப்படையில் பதில் விளைவும் அமைய வேண்டியதாகிறது. இது அடுத்த கட்டத்தில் பரிமாண வளர்ச்சி கொள்வது தவிர்க்க இயலாதது. இறுதிப் போராட்டம் சாமான்யத் தமிழர்களை ஒடுக்கும் சிங்களவர், மேட்டுக்குடித் தமிழர், ஏகாதிபத்தியச் சக்திகள் என எல்லா ஆதிக்கச் சக்திகளுக்கும் எதிரானதே.

● இலங்கையில் முதலாளித்துவ அரசைக் கவிழ்ப்பதற்கு சிங்கள பரந்துபட்ட மக்களின் அரசுயந்திரத்துக்கு எதிரான போராட்டத்தை நாம் ஆதரிப்பது பற்றி உங்கள் கருத்து யாது?

○ முந்தைய பதிலிலேயே இதற்கான பதிலும் அடங்கியிருக்கிறது. உலகெங்கும் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் ஒன்றோடொன்று கைகோர்க்காமல் மனித விடுதலை முழுமை பெறாது.

சிங்களத்தைப் பொறுத்தமட்டில் இந்தக் கைகோர்த்தல் சற்றே தாமதப்படலாம் என்று நான் கணிக்கிறேன். ஏனென்றால் அங்கே இனவாதமே இத்தனை காலமும் முதன்மை தரப்பட்டு வந்திருக்கிறது.

● *சென்னை 'பரீக்ஷா' நாடகக்குழுவின் இயக்குனரும், எழுத்தாளரும், பத்திரிகையாளருமான 'ஞாநி' அவர்களை தமிழீழ மாணவர் பேரவையின் பொங்கும் தமிழமுது சஞ்சிகைக்காகப் பேட்டி கண்டனர். 31 வயதே ஆன அந்த இளம் கலைஞனின் கருத்துக்கள் இங்கே வாசகர்களுக்காகப் பரிமாறப் படுகின்றன.*

—ஆசிரியர் குழு

இதிலிருந்துமீண்டு மனித நேய அடிப்படையை மக்கள் தரிசிக்கச் செய்ய முதலில் பரவலான பிரச்சார இயக்கம் தேவைப் படுகிறது.

● சர்வதேச ரீதியில் எமது விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றி ஏதாவது கூறுவீர்களா?

○ மனிதப் பண்புகளில் நம்பிக்கை வைத்துள்ள எல்லா உலகப் பிரஜைகளின் கவனமும் நிச்சயமாக உங்கள் போராட்டத்தின் பக்கம் திரும்பியிருக்கிறது. அமைதியை நாடும் உலக மக்கள் இலங்கை நிலைமை குறித்துக் கவலை கொள்கிறார்கள்.

ஆனால் உலக மக்களின் உணர்வுகளுக்குப் புறம்பாகவே அந்தந்த நாடுகளின் அரசுகள் நடத்துகொள்வதே பெரும்பாலான நிலையாக இருக்கிறது. எனவே உலகெங்கும் உங்கள் நிலை குறித்து அனுதாபம் காட்டும் மக்கள் தத்தம் அரசுகள் இச்சூழ்நிலையில் 'நல்லது செய்தது ஆற்றாராயினும்' அல்லது செய்யாவண்ணம் தடுக்கத் தங்கள் உணர்வுகளை ஒழுங்கு படுத்தி அறிவித்தல் அவசியம்.

● உலகின் பிரச்சாரச் சாதனங்களில் இன்று பத்திரிகை முதலிடம் பெறுகின்றது. அவைகள் வழங்கும் செய்திகள் அடிப்படையிலேயே மக்கள் பல உண்மைகளை அறிகின்றனர். எமது விடுதலைப் போராட்டத்தில் இந்தியப் பத்திரிகைகளின் பங்கு மற்றும் அவை இந்திய மக்கள் மத்தியில் ஏற்படுத்திய எமது பிரச்னைகள், போராட்டங்கள் பற்றிய புரிந்துணர்வு பற்றி ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் நீங்கள் புரிந்துகொண்டதைக் கொஞ்சம் கூறுங்களேன்.

○ தமிழ்நாட்டுப் பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில் உங்கள் விஷயம் பிரதான விற்பனைச் சரக்குகளில் ஒன்று என்ற அணுகுமுறையே பொதுவாகக் காணப்படுவதாக நான் கருதுகிறேன். இங்குள்ள பத்திரிகைகளின், அரசியல்வாதிகளின் இயல்புக்கு ஏற்ற அணுகுமுறையே இது. இதை மீறி ஓரளவு உங்கள் பிரச்னைகள் தெரியவந்திருப்பது தற்செயலானதுதான்.

பொதுவாகத் தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படுகிறார்கள் என்ற அளவில் விஷயம் அறியப்பட்டு அனுதாபம் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு வெளியே இந்தியாவின் பிற மாநிலங்களில் ஒரு சில ஆங்கில இதழ்களின் கட்டுரைகள் மட்டுமே ஈழப் பிரச்னைகளைத் தொட்டிருக்கின்றன. இது போதாது.



ஈழப் போராளிகளின் பிரச்சாரப் பிரிவினர் ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலுமாவது குறைந்த பட்சம் பொதுக் கூட்டங்களை நடத்தி விஷயங்களை அறியச் செய்யவேண்டும். ஆங்காங்கே உள்ள உள்ளூர் அறிவாளிகளில் உங்கள் பிரச்னைகளை அறிந்து ஆதரவு காட்டுவோரை இக்கூட்டங்களில் உள்ளூர் மொழியில் உரையாற்றச் செய்யவேண்டும். வட இந்தியாவின் இந்தி மொழி ஏடுகளில் ஈழம் பற்றிய செய்திகள் வெளியாக அந்த ஏடுகளைச் சார்ந்தோரிடம் முதலில் நீங்கள் நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டும்.

● சினிமா மோகத்தில் மக்கள் மூழ்கி எமது பாரம்பரியக் கலைகளில் ஒன்றான நாடகமே பிடிக்காத அளவுக்குப் போய் விட்ட இந்தக் காலகட்டத்தில் எந்த அளவுக்கு மக்களை நாடகத்தின்பால் ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது என்றும் முற்போக்கான நாடகங்கள் மூலம் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தைக் காண முனைகிறீர்கள் என்றும், ஒரு கலைஞன் என்ற ரீதியில் உங்கள் அனுபவத்தைக் கூற முடியுமா?

○ சினிமா மோகத்தால் நாடகத்தை மக்கள் விரும்பவில்லை என்று நான் கருதவில்லை. மோசமான சினிமா, மோசமான நாடகம் இரண்டுமே வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதிலிருந்து மக்கள் தங்களை மீட்டுக் கொள்ள இரு துறைகளிலும் முயற்சிகள் தேவை.

கலை சமூக மாற்றத்துக்கு உதவக் கூடியதேயன்றி தானே சமூக மாற்றத்தை ஏற்படுத்திவிடுவதல்ல. நிலத்தை உழுவதற்கும், களையெடுப்பதற்கும் நிகரான பணியே கலையினுடையதும் கலைஞருடையதுமாகும். இதன் தாக்கமும் பயனும் உடனடியான காலகட்டத்தில் துல்லியமாக மதிப்பிட இயலாதவை. இப்படி உடனடி மதிப்பீடு முடியாத காரணத்தால், சமூகமாற்றத்தில் அக்கறையுள்ளோர், கலைதனை அலட்சியப் படுத்தலும்; இரண்டாம் பட்சமாக்குதலும் நடக்கிறது.

மனிதர்களின் மனங்களுடன் சிந்தனையுடன் உறவாடும் சாதனமாதலால், கலைச் சாதனங்கள் நீடித்த விளைவ

ஏற்படுத்தக் கூடியவை. ஆனால் இவை குறுகிய காலப் பயிர்களல்ல. இதுவே என் அனுபவ அறிவு. மனிதருக்குள்ளே முடங்கி இருக்கும் அடிப்படைப் பண்புகளான நேசத்தையும் தர்மாவேசத்தையும் மீண்டும் முழு எழுச்சி பெறச் செய்வதே படைப்பாளியின் பணி.

● சமூகப் பிரக்ஞை உள்ள ஒரு கலைஞன் என்ற வகையில் உங்கள் படைப்புக்களிலோ நாடகங்களிலோ எங்கள் போராட்ட நிகழ்வுகள் இடம் பெற வாய்ப்பளிப்பீர்களா?

○ வலிந்து எதைச் செய்தாலும் கலை தன் வலிமையை இழந்து விடுகிறது. உங்கள் போராட்ட நிகழ்வுகள், இயல்பான போக்கில் எங்கள் படைப்புக்களில் வெளியாகும் போதே அவையும் பயன்பெறும்.

உங்கள் போராட்டங்களைப் பற்றிய செய்திகளை மக்களுக்குச் சொல்வதில் பத்திரிகையாளன் என்ற முறையிலேயே என் பங்கு அதிகமாக இருக்கும்.

● தமிழீழத்தில் இன்றுள்ள போராட்ட நிகழ்வுகளில் ஏற்படும் தமிழ் கலை இலக்கியப் புது வெள்ள ஓட்டம் பற்றி உங்கள் கருத்து யாது? தமிழீழக் கலைஞர்களின் ஆற்றலை இந்த வகையில் எவ்வாறு மதிப்பிடு செய்வீர்கள்?

○ எல்லாக் கலை இலக்கியமும் அந்தந்தக் காலத்தின் போராட்டங்களை எதிரொலிக்கும் போது இன்னொரு பரிமாணம் பெறுகின்றன. போராட்ட உணர்வால் பிரசாரம் செய்யமட்டுமே முனைந்தவராக இருக்கும்போது பிரச்னை எழுகிறது. கலை வடிவத்தைக் கையாளுபவர் கருத்தில் கூர்மை கொண்டால் மட்டும் போதாது: மாறாக ஒரு கலாபூர்வமான படைப்பாளி, சமகால நிகழ்ச்சிக்குத் தன் பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் போது கிடைக்கும் படைப்பின் தாக்கம் நிலையானதும் வலுவானதுமாகும். கோஷம் வேறு, கவிதை வேறு. இரண்டுக்கும் குறிப்பிட்ட வெவ்வேறான பயன்கள் உண்டு. சிறந்த கவிஞரால் சிறந்த கோஷம் எழுத முடியாமல் போகலாம்.

இந்த இரண்டு தன்மைகளையுமே தமிழீழக் கலை இலக்கிய வெளிப்பாடுகளில் காண்கிறேன்.

● தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலக்கியத்தின் பங்கு, ஆயுதப் போராட்டத்தின் பங்கு பற்றிக் கொஞ்சம் கூறுவீர்களா?

○ இலக்கியமும் ஆயுதம் தான். கொஞ்சம் வித்யாசமான ஆயுதம், அது துப்பாக்கியல்ல, கலப்பை.

எந்த விடுதலைப் போராட்டத்திலும் இலக்கியத்தின் பங்கு, கலையின் பங்கு என்ன என்பது பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

தமிழீழ விடுதலை மட்டுமல்ல எந்த விடுதலைப் போரிலும் ஆயுதப் போராட்டத்தை நோக்கி மக்களைத் தள்ளுபவர்கள், ஆதிக்கக்காரர்களும் ஒடுக்குமுறையாளர்களும்தான்.

மக்களை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திப்பவர்கள் அவர்களே.

ஆனால் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை இறுதியாக முடிவு செய்ய மக்களே சரியானவர்கள். மக்களின் சார்பில் சிறு குழுக்கள் இவற்றை முடிவு செய்வதை நான் ஒப்பவில்லை. முதலில் மக்களிடம் அவர்களுடைய பரவலாக எடுத்துச் சொல்வதே சரி. போராட்ட வடிவத்தை மக்களே தீர்மானிப்பார்கள்.

தமிழீழ விடுதலைப் போரில் ஏற்கனவே ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி விட்டது. ஆனால் நடப்பது விடுதலைக்கான ஆயுதப் போராட்டமாகவே எனக்குத் தெரியவில்லை. தற்காப்புக்கான போராட்டமாகவே அது இன்னமும் இருப்பதாகப் படுகிறது.

● தமிழீழ விடுதலைப் போராளிகள் தம் லட்சியப் போராட்டத்தில் வெற்றி காண நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

○ எந்த லட்சியமும் தொடர்ந்த உழைப்பின்றி நிறைவேறுவதில்லை. போராட்டங்கள் இடையிடையே சோர்வை ஏற்படுத்தக் கூடும். இறுதி வெற்றி இந்தச் சோர்வைத் தாண்டிச் செல்கிறவர்களுக்கே உரியது.

மக்கள் மீதிருக்கிற நேசத்தினால் மக்களில் ஒருவராக இதில் ஈடுபட்டு இருக்கிறோமா? நம்முடைய ஈகோ வெளிப்பாட்டின் மற்றொரு வடிவமாக இதைக் காணுகிறோமா? என்ற கேள்வி எல்லாக் கலைஞர்களுக்கும், படைப்பாளிகளுக்கும், போராளிகளுக்கும் எழுந்தபடியே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதற்கான பதில்தான் இறுதியில் வெல்வது நபர்களா லட்சியங்களா என்பது முடிவாகும். ○

---

● ''சக்தியை ஆக்கிரமிப்புத் தன்மையுடன் பயன்படுத்துவதுதான் பலாத்காரம். ஆகவே அதுதான் தார்மீக அடிப்படையற்றது. ஆனால் அந்தப் பலாத்காரமானது அங்கீகரிக்கப்பட்ட நோக்கத்துக்காகப் பிரயோகிக்கப்படும்போது அதற்குத் தார்மீக நியாயம் உண்டு. வன்முறையை எந்த நிலையிலும் தவிர்ப்பது என்கிற அகிம்சை வாதம் கற்பனையானது.''

— பகத்சிங்

● ''கவிஞன் என்பவன் மேகங்களுக்கு இடையில் மிதப்பதற்குக் கற்பனை செய்து கொள்ளும் பேடியல்ல. வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட, அதை வழிநடத்துச் செல்லும் ஒரு பிரஜை.''

— நசீம் இக்மத்

# சூரியனைத் தொலைத்தவர்கள்!

● அட்டைப்படக் கவிதை ● திருவாதிரையன்

ஓ! சூரிய தேவா! பொங்கலிட்டு உன்னை வணங்கி வந்த
நாங்கள் இன்று தண்டனிட்டா வாழ்வது...?

செந்நெல் விளைந்த எங்கள் பூமி இன்று
செந்நீரில் மூழ்கிக் கிடக்கிறது.
உழுகின்ற கலப்பையில் தமிழன் உடல்களே
சிதைந்து வெளிப்படுகின்றது!

உணர்வுகளும் உறவுகளும் மரத்துப்போன
மயான பூமியாகத் தமிழர் வயல்கள்!

ஈழத்தில் இன்று ஈழவர் உதிரம் மட்டுமே பொங்கி வழிகின்றது!
பொங்கி எழுந்த தமிழன் சுட்டுக் கொல்லப்படுகின்றான்!

சூரியனைத் தொலைத்துவிட்ட சுதந்திரத் தமிழன்
சுதந்திரம் பறிபோன சூக்குமம் அறியாது பொங்கலிட்டுப்
பட்டாசு வெடிக்கையில் பட்டாளத்தான் துப்பாக்கி
வேட்டு பானையை உடைத்தது!

மங்கிப்போன தமிழினத்தின் மலர்ச்சியை எதிர்பார்த்து
சூரியனைத் தொழ முயல அவன் எங்கோ தொலைந்து போனான்!

ஆயிரம் கனவுகளில் ஆர்ப்பரித்து
ஆகாயக் கடலில் ஆனந்த அலைகளை
அளைந்து விளையாடும் சிறுகுழந்தை போல்
பொங்கலிட ஆசைப்படுகின்றோம்!

பொங்குவதற்கு வழி இருந்தும் புசிப்பதற்கு சுதந்திரம்
இல்லாது போனது!

அறுவடை வயல்களில் பெருஞ்சாளி வேட்டை!
ஆனால் அதுவே இன்று இராணுவத்துக்கு விளையாட்டு!
பெருஞ்சாளி தமிழன்! பெருஞ்சாதியும் தமிழன் தானே!

உழுவதற்கு நிலமில்லாதபோது உளவாரங்களைத் தூக்கிவந்தோம்!
உரங்களைப் புதைத்த வயல்களில் எங்கள் உடல்களைப்
புதைக்க நேரிடினும் எங்கள்—
உணர்களையும் விடுதலையையும் புதைத்து—
'அடிமை' அறுவடையை உனக்கா படைப்போம்?

உயிரினும் மேலான உணர்வுகள் எங்கள்
உதிரத்தில் பாய்வது உண்மையெனில்
பொங்கலிட்ட இந்தத் தானியம் எங்கள்
வேதனையையும் விரக்தியையும் மீறிய குருதி அறுவடைகள்!

எங்கள் வயல்களில் இனி அந்நிய விதைகளை
விதைக்கப் போவதில்லை!
சுதந்திர வயல்களில் சுகந்தம் விளையும்!
சூரிய தேவா! அப்போது நாம்
சுதந்திரமாய்ப் பொங்கலிட்டு உனைத் தொழுவோம்! ●

# பொங்கும் தமிழமுது வாசகத் தோழர்களுக்கு..!

வர்த்தகச் சஞ்சிகைகளுக்கு மத்தியில், கொள்கைச்குன்றாய், வளம் மாறாமல், தளம் மாறாமல் உங்கள் கரங்களில் தொடர்ந்து தவழ்ந்து கொண்டிருக்கின்றது பொங்கும் தமிழமுது. கடந்த காலத்தில் நாங்கள் நடந்து வந்த பாதையில் தான் எத்தனை எத்தனை போராட்டங்கள்... இன்னல்கள்... இத்தனையும் மீறித் தங்களை விரைவாகவும், மலிவாகவும் அடையவேண்டும் என்ற அவாவினால் இதன் விலையையும், சந்தாக் கட்டணங்களையும் மறு சீரமைப்புச் செய்துள்ளோம்:

- **தனிப்பிரதி ஒன்றின் விலை :**

  | | |
  |---|---|
  | தமிழீழத்தில் | — 3-00 |
  | இந்தியாவில் | — 1-50 |
  | இதர வெளிநாடுகளில் | — 1 U. S. DOLLAR |

  (அல்லது இதற்குச் சமமான தொகை)

- **ஆண்டுச் சந்தா :**

  | | |
  |---|---|
  | தமிழீழத்தில் | 30-00 |
  | இந்தியாவில் | 15-00 |
  | இதர வெளிநாடுகளில் | 12 U. S. DOLLAR |

  (அல்லது இதற்குச் சமமான தொகை)

- 1984-ஆம் ஆண்டின் சந்தாதாரர்கள் 1985-ஆம் ஆண்டிற்கான சந்தாத் தொகையைச் செலுத்தி, சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

- சந்தாதாரர்களாக விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

  28, C. N. K. சாலை,
  சென்னை-5

- பணம், காசோலை, மற்றும் காசுக் கட்டளைகளை விரைவாக V. K. JAYAKUMAR என்ற பெயருக்கு, மேற் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு

பதிவு எண்:– 42574/84
அச்சுப் பதிப்பு: பாவாணர் அச்சகம்,
சென்னை-2.

பொங்கும்

# தமிழமுது

தமிழ் ஈழ மாணவர் பேரவை

''மிகக் கொடுமையான சித்திரவதைகளையும், மரணத்தையும் சிரித்த முகத்தோடு சந்திக்க இளைஞர்கள் தயாராக இருக்கவேண்டும். மனிதகுல முன்னேற்றத்தின் முழு வரலாறும் இளைஞர்கள் — யுவதிகள் இரத்தத்தால்தான் எழுதப்படவேண்டும்.''

— பகத்சிங்

நூல் அஞ்சல்

பெறுநர்:

..........................................................

..........................................................

..........................................................

அனுப்புவோர் :-
தமிழீழ மாணவர் பேரவை
28. சி. என். கே. சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.